Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247

(சி-12956)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-13 | 30-10-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-257

## கடற்படை அதிகாரிகள் மீது திருமலையில் தாக்குதல்

(திருமலை)

திருமலையில் இரண்டு கடற்படை அதிகாரிகள் நேற்று தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளனர்.

மாலை 6-15 மணியளவில் பயிற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரண்டு கடற்படை அதிகாரிகளை திருமலையின் வடக்கே உள்ள 11ஆவது மைல்கல் என்னும் இடத்தில் நால்வர் அடங்கியகுழுவொன்று கடுமையாக தாக்கியிருப்பதுடன் அவர்களை கடத்தவும் முயற்சித்துள்ளது. இதன் போது இரண்டு பகுதியினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. அந்த வேளை அந்த இடத்திற்கு சிறிலங்கா இராணுவத்தின் உந்துருளி படையணியினர் விரையவே, தாக்குதலை நடத்திய குழு, அவ்விடத்தை விட்டு தப்பித்துச்சென்றுள்ளது என திருகோணமலை கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.சம்பவத்தின்போது பலமான காயங்களுக்குள்ளான இரண்டு சிறிலங்கா

(12ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண் மீது கைக்குண்டு வீச்சு; இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நக்கா வீதி - நரிக்குண்டுக்குளத்துக்கு சமீபமாகவுள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து சம்பவ இடத்தில் பெருமளவு படையினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டதால் அங்கு நேற்று இரவு வரை பதற்றம் நிலவியது.உந்துருளி ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்களே கைக்குண்டை வீசித் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சம்பவ இடத்தைச் சூழவுள்ள பகுதிகளில் படையினரும் பொலிசாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

(33,28,32,37,கீ)

## இனம் காணப்படாத நோய் மூன்று குழந்தைகள் பலி

(கொழும்பு)

இனம் காணப்படாத நோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டு அம்பாந்தோட்டை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த மூன்று குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

இந்நோயினை இனம் காண்பதற்கான பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளதாக அந்த வைத்திய சாலையின் சிறுவர் நோய் விசேட நிபுணர் தெரிவித்துள்ளார். இந்த இனம் காணப்படாத நோய் தொடர்பாக சில தினங்களுக்கு முன்னரே தாம் அறிய நேரிட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த நோய் தொடர்பாக அப்பிரதேச மக்கள் பீதியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(32)

# படையினரின் மிலேச்சத்தனத்தை கண்டித்து இன்று துக்கதினம்

### புத்தூர் சம்பவத்திற்கு எதிராக யாழ்., கிளியில் அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**யாழ். புத்தூர் கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கண்டித்து இன்று யாழ். குடாநாட்டிலும் கிளிநொச்சியிலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.**

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை புத்தூர் கிழக்கிலுள்ள வீடொன்றில் உறக்கத்தில் இருந்த பெண் ஒருவர் மீது இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவு புரியமுற்பட்டதன் விளைவாக அப்பகுதி மக்கள் தமது குடியிருப்புக்களை அண்டியுள்ள இராணுவ முகாமை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை அடக்குவதற்காக இராணுவமும், பொலிசாரும் இணைந்து மேற்கொண்ட குண்டாந்தடியடி மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் என்பனவற்றில் அப்பாவிப் பொதுமகன் ஒருவர் பலியானதுடன் மேலும் 15 பேர் காயமடைந்தனர். மக்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்றுப் பிற்பகல் மீசாலைப் பகுதியில் வீதியால் வந்து கொண்டிருந்தவேளை முகத்தினை கறுப்புத் துணியால் கட்டியவாறு அவரைப் பின் தொடர்ந்து உந்துருளியில் வந்தவர்களால் வாள் வெட்டுக்கு இலக்காகி இவர் படுகாயமடைந்ததாகத் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த இராஜசிங்கம் (வயது-43) என்பவரே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(கீ.27,32)

## அமைதி முயற்சிகளில் இணையாவிட்டால் நாடு பிளவுபடுவது தவிர்க்க முடியாது

### ஐ.தே.க சனாதிபதி வேட்பாளர் ரணில்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளில் அனைத்துக்கட்சிகளும் ஒன்றாக இணையாவிட்டால் நாடு பிளவுபடுவது தவிர்க்கமுடியாதது என்று ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மாவட்ட சபைகளையும் மாகாண சபைகளையும் ஐக்கிய தேசியக்கட்சி அறிமுகப்படுத்தியது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிர்க்கட்சியினர் அதைச் செயற்படுத்த விடாமல் தடுத்து விட்டனர். ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பது என்ற கோட்பாட்டை முன்வைத்தது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் சந்திரிகா குமாரதுங்கா தான். ஆனால் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் நாட்டை நாம் பிளவு படுத்த முயலு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரிசியாலைத் தொழிலாளி அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் அரிசி ஆலைத் தொழிலாளி ஒருவர் நேற்று முற்பகல் இனம்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் அக்குரணையைச் சேர்ந்த நவரட்ன ஹெட்டிகெதர முதியன்சலாகே அபயரத்ன(வயது 38)என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனது இடைத்தங்கல் முகாமிலிருந்து வழமை போல் அக்கரைப்பற்று சாகாமம் வீதி வழியாக அரிசி ஆலைக்கு தொழிலுக்காகச் சென்று கொண்டிருந்த போது கோளாவில் என்னுமிடத்தில் வழி மறித்த நபர்கள் இவரை சுட்டுக்கொன்று விட்டு தப்பிச்சென்றுள்ளதாக அம்பாறை மாவட்ட சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளார்.

## படை வாகனத்தில் மர்ம வெடி: இராணுவத்தினர் சிலர் காயம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பகுதியில் நேற்று முன்தினம் சுற்றுக் காவலில் ஈடுபட்ட சிறிலங்கா படையினரின் வாகனத்தில் மர்ம வெடியோசை ஏற்பட்டுள்ளது. இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சிறிலங்கா படையினர் சிலர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் உடனடியாக பலாலி படைத்தளத்தில் அமைந்துள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக சிறிலங்கா படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## எரிபொருட்களின் விலையை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

உலகசந்தையில் மசகு எண்ணை,பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணையின் விலை அதிகரித்து வருவதனால் பெட்ரோல் டீசல் மற்றும் மண்ணெண்ணையின் விலையை அதிகரிக்க உள்ளதாக சிறிலங்காப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

டீசலின் விலையைஒன்பது ரூபாவினாலும், பெட்ரோலின் விலையை இரண்டு ரூபாவினாலும் மண்ணெண்ணையின் விலையை லீற்றர் 26 ரூபா 80 சதத்தினாலும் அதிகரிக்குமாறு எரிபொருள்விலை மறுசீரமைப்புக்குழு அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிப்புக்கமைய நாட்டின் எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதியளிக்காமைக்காக பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சிறிலங்கா திறைசேரி நிவாரணம் வழங்குகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் தொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளரைக் காணவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கடந்த 27 ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளர் ஒருவர்இது வரை கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை தேடும்பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தொடர்பாக தகவல் கிடைத்தால் 0212228942 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்துமாறும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் மரியராசா தெரிவித்துள்ளார். (20)

**கலைவட்டம், நுண்கலைத்துறை,யாழ்.பல்கலைக்கழகம்**

முதுசம் XI

**கடந்த காலமும் கழிவிரக்கமும்**
**மு.கனகசபையின் ஓவியங்களின் தொகுப்புக் காட்சி**

27,28,29,30 ஒக்ரோபர் 2005,காலை 10 மாலை 5மணிவரை நூலகக் கேட்போர் கூடம்,யாழ்.பல்கலைக்கழகம்.

நுழைவு ரூபா.20

புதிய விதுஷன் நகைமாடம்,06,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி.13192)



**சலுகை விலையில்**
யாழ்.கொழும்பு விமானக் கட்டணமும்

**சலுகை விலையில்**
**கொழும்பு,சென்னை விமானக்கட்டணம்**

லண்டனுக்கு 1 kg மிற்கு பார்சல் 600/=ரூபா

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
MANOJ AIR TOURS PVT LTD
32, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.
021-2223916 (சி.13111)



## பணி நிலை வேண்டுகை

பணிநிலை:- உற்பத்திப் பணியாளர்கள் (கல்லாக்கல் உற்பத்தி)

வயதெல்லை:- 18 தொடக்கம் 40 வரை

சம்பளம்:- 7000/=

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-
வசீகரன் கூ.த.தொழிலகம்,
பூங்காவனம் சந்தி,
முரசுமோட்டை.

காலம்:- 12. 11. 2005 (சனிக்கிழமை)

நேரம்:- காலை 10. 00 மணி

குறிப்பு:- தங்குமிட வசதி, உணவு என்பன இலவசமாக செய்து தரப்படும்.

மேலாளர்,
வ.கூ.து. தொழிலகம்,
முரசுமோட்டை.

(6898)


## சாவுஅறிவித்தல்

### திருமதி.குஞ்சம்மா

கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் கரடிப்போக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.குஞ்சம்மா என்பவர் நேற்று (29.10.2005) காலை காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்புமனைவியும், காலஞ்சென்ற சின்னராசா,இலட்சுமி அம்மாவின் பாசமிகு தாயாரும், சி.முருகேசு, இராணி அம்மாளின் அன்பு மாமியாரும், சந்திரசேகரன் (கனடா) இராஜசேகரன் (அமெரிக்கா) புவனேஸ்வரி (கனடா) இரஞ்சினிதேவி (நிர்வாகசேவை) சந்திரமோகன், சந்திரவாணன்,இரஜிதாதேவி ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார் .இவரின் இறுதிக் கிரியைகள் 30.10.2005 இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கிளிநொச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:-
முருகேசு,
வேல்முருகன் அரிசிஆலை,
கரடிப்போக்கு, கிளிநொச்சி.

(6897)

# இராணுவ அடாவடி தொடருமானால் அரச இயந்திரத்தை முடக்க போராட்டம் நடக்கும்

## –உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவத்தின் அடாவடித்தனத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெற்றால் ஒட்டு மொத்த மாணவர் சமுதாயம் போராட்டங்களில் ஈடுபட்டு அரச இயந்திரங்களை முற்றாக முடக்கவேண்டி வரும் என்று எச்சரிக்கின்றோம். என இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பிரசன்னமாகியிருந்த சமயத்திலேயே அப்பாவிப் பெண்களும் வயோதிபர்களும் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களைப் பாதுகாக்கின்றோம் என்று கூறிக் கொள்பவர்களே பொதுமக்களைத் தாக்கிக் கொன்றொழிக்க முற்பட்டுள்ளார்கள்.தமிழர்களுக்கு எந்தவித நீதியும் நியாயமும் கிடைக்கப் போவதில்லை .நாங்கள் எங்களுக்கான பாதுகாப்பையும் நீதி நியாயமும் எங்கள் கைகளில் எடுக்கவேண்டும் என்பதை யாரும் தடுக்க முடியாது என்பதை இவ்வாறான சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ்மக்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டிய காலம் நெருங்கி விட்டது. எம் இனத்தை நேருக்கு நேர் நின்று வெற்றி கொள்ள முடியாத கயவர்கள், இவ்வாறான சமுதாயத்தை சிரழித்து இனத்தின் அடையாளத்தை அகற்றுவதற்கு மிக முனைப்புப்பெற்றுச் செயற்படத் தொடங்கிவிட்டார்கள் என்பதை இச் சம்பவம் மிகத் துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றது.

ஆண் துணையற்ற வீட்டில் நுழைந்து பாலியல் பலாத்காரம் புரிய முனைந்த சம்பவமானதும் அதனை அமைதியான முறையில் தட்டிக்கேட்க முனைந்தவர்களை கொல்ல முனைந்த செயற்பாடு, தமிழர்கள்மீது இவ்வாறான கொடூரங்களை அரங்கேற்றினால் தமிழ் மக்கள் கேட்பார்கள் யாருமில்லாத அநாதரவானவர்கள் என்று அரசு நினைப்பதை எடுத்துக் காட்டுகிறது. எம் இனிய உறவுகளே இந்த நிலை நாளை உங்கள் வாசலைத் தட்டுவதற்கு நேரம் எடுக்காது. இவ்வாறான அவல நிலையில் இருந்து நாம் முழுமையாக விடுபட வேண்டுமானால் நாம் எல்லோரும் ஓரணியாய் அணிதிரண்டு எமது எதிர்பார்ப்பைத் தெரிவித்து எதிரிக்கு எமது பலத்தைப் புரிய வைக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டது. (தீ)


**வரிவிளம்பரம்**

**புதிய பிரிவுகள்ஆரம்பம்**
MS-Word,
MS-Excel, MS-Access,
MS-Powerpoint, Windows.
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகளுக்கு:-வின்நெற் கணனி பயிற்சிநிலையம்,
டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)


## ஊர்வலம்

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி நேற்று முன்தினம் திருகோணமலை நகரசபையின் பொது நூலகத்தினால் ஊர்வலமும் கூட்டமும் நடத்தப்பட்டது. சுமார் பத்துப் பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள்,ஆசிரியர்கள் அதிபர்கள், பெரியோர்கள், ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்திலிருந்து திருகோணமலை சிறி சண்முகா இந்து மகளிர்கல்லூரியின் பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலம் காலையில் ஆரம்பமாகி, கூட்டம்நடைபெற்ற இடமான திருகோணமலை மக்ஹெய்சர் விளையாட்டரங்கை பிரதானவீதி,டொக்யார்ட் வீதி ஊடாக வந்தடைந்தது. (25)

## கலந்துரையாடல்

(அலுவலசெய்தியாளர்)

கிளிநொச்சி. மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிர்வாகிகளுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள தமிழீழ மாணவர் அமைப்பு செயலகத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து கல்வி நிலைய நிர்வாகிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் வேண்டியுள்ளனர். (கு)

### காணவில்லை

சங்கரலிங்கம் போல் சுரேஸ் போல் (702130620x,99 ஆனந்தபுரம், 6ஆம்வட்டாரம், புதுக்குடியிருப்பு) என்பவரது அடையாளஅட்டை தவறவிடப்பட்டுள்ளது. இதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை,புதுக்குடியிருப்புஎனும் விலாசத்தில்ஒப்படைக்கவும்.இதற்குதகுந்த சன்மானம்வழங்கப்படும். (6635)


**கடைகட்டடம் வாடகைக்கு**

ஏ.9வீதி155 ஆம்கட்டை சந்தியில் கடைகட்டடம் வாடகைக்கு உள்ளது. தொடர்புக்கு-கோமான் தையலகம், யாழ்சாலை, கிளிநொச்சி.தொ.இல. 0212285912. (6890)

**வீடு வாடகைக்கு**

பஸ் நிலையறோட் கிளிநொச்சி வீதிக்கு அருகே சகல வசதிகளுடன் கூடிய இரண்டு பெரிய வீடுகள் வாடகைக்குண்டு (NGOவிரும்பத் தக்கது.) தொடர்பு:-021228 5778 (6895)

**மறைக்கோண் புடவையகம்**

சகலவிதமான ஆடைகளையும் மலிவாக பெற்றுக்கொள்ள



மறைக்கோண் புடவையகம்
இல.73,பொதுச்சந்தை,
கிளிநொச்சி.
உரிமையாளர்.து.ராஜகுமார்
(சி.13174)


**10ஆம் ஆண்டின்நீங்காத நினைவில்**



மண்ணில்
25.12.1969

விதையாக
30.10.1995

## லெப்.கேணல் அகிலா

ஆயிரம் கருத்துக்கு கருவானவள்
ஆயினும் நம் நலத்திற்கு மருந்தானவள்
போரிடும் பகை வெல்ல போரானாவள்
யாரிவர் என கேட்கும் கரும்புலிகளை
சரித்திரம் ஆவதற்கு வழி காட்டியவள்
நம் தேசம் காத்திட உயிர் தந்தவள்

"கண்மூடி உயிர் அடங்கிய
உயர் நாளிதை"
அஞ்சலித்தோம் உன்னுடன் மாவீரர்
அனைவரையும்.

புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்.

உங்கள் பணி தொடரும்,
போராளிகள்.

(6874)


ஒக்ரோபர் வாசிப்பு மாதம்

நல்லாசிரியர் கற்பிப்பதை விட விழிப்பை ஏற்படுத்தவே விரும்புவார்....

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே

வாசியுங்கள்

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு

தொடர்புகளுக்கு AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili@Viluthu.org

# டில்லியில் தொடர் குண்டு வெடிப்புக்கள் இறந்தோர் தொகை நூறைத் தாண்டியது

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன


மக்கள் பதற்றத்தில்

(புதுடில்லி)


**இந்திய தலைநகர் புதுடில்லியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற நான்கு தொடர் குண்டு வெடிப்புக்களால் நூறிற்கு மேற்பட்டோர் பலியாகினர். யாருமே எதிர்பாராத வகையில் வெவ்வேறு இடங்களில் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெற்ற இக் குண்டு வெடிப்புக்களால் மக்கள் பதறியடித்து ஓடினர்.**

பொலிசார் உடனடியாகவே செயலில் இறங்கி மேலும் சில குண்டுகளை வெடிக்க முன் செயலிழக்க செய்தனர். உடனடியாகவே டில்லி முழுவதும் உச்சக் கட்டப் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது தொடர்ந்தும் அங்கு பதற்றம் நிலவுகின்றது.

டில்லி ரயில் நிலையமருகே உள்ள முக்கிய வணிகப் பகுதியான ஹாவர் பெஞ்சில் மாலை 5.30 மணியளவில் முதல் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த உந்துருளி ஒன்றில் வெடித்துக் சிதறிய சக்தி வாய்ந்த குண்டால் பல கடைகள் தூள் தூளாகின. இதைத் தொடர்ந்து



சரோஜினி நகர் சந்தைப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன. மூன்றாவது குண்டு கோவிந்தபுரி சந்தைப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த டில்லி போக்குவரத்து கழக பேருந்தில் வெடித்தது. கோல் பூந்தைப்



பகுதியில் நான்காவது குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இதையடுத்து சந்தைப்பகுதிகள் மூடப்பட்டன. போக்குவரத்துக்கள் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மக்கள் கூட்டம் அலை மோதிய சந்தைப்பகுதியில் இக் குண்டு வெடிப்பு இடம்பெற்றதால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

மேலும் ஒருசில இடங்களில் வைக்கப்பட்ட குண்டுகள் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

பிந்திக் கிடைத்த தகவலின் படி இக் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை தாம் கைது செய்துள்ளதாக இந்தியப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## பாரவூர்தி- பேருந்து விபத்து 16 பேர் உடல் நசுங்கிப் பலி

(சென்னை)

தமிழகம் திருச்சியில் நேற்றுக் காலை பாரவூர்தி ஒன்றுஅரச பேருந்துடன் மோதியதில் 17 பேர் கொல்லப்பட்டனர். 32 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது பாரவூர்தியில் தொழிலாளர்களை ஏற்றிச் சென்று கொண்டி ருக்கையில் முன்னால் சென்று கொண்டிருந்த வாகனமொன்றை முந்திச் செல்ல பாரவூர்தி ஓட்டுநர் முயன்ற வேளை சம நேரத்தில் நேரெதிரே வந்து கொண்டிருந்த அரச பேருந்திற்கு வழி விடும் நோக்கில் பாரவூர்தி ஓட்டுநர் பாரவூர்தியை திருப்ப முயன்ற வேளை கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி பேருந்துடன் மோதி விழ்ந்து இக் கோர விபத்தில் 16 பேர் உடல் நசுங்கி இறந்தனர். மேலும் 32 பேர் படுகாயமடைந்தனர் இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் எனத் தெரிய வருகிறது.

## இங்கிலாந்தில் குடியேறுவோர் தொகை அதிகரிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தில் சட்ட பூர்வமாகவும், திருட்டுத் தனமாகவும், குடியேறும் வெளிநாட்டினர் எண்ணிக்கை இந்த ஆண்டு கணிசமாக அதிகரித்துள்ளது.

இப்படி குடியேறியவர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு 14 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்தியர்கள், ஈராக்கியகுர்தூக்கள் ஆப்கானிஸ்தானியர்கள், சோமாலியர்கள், உக்ரைன் நாட்டினர் ஆகியோர் அதிகளவில் குடியேறியுள்ளனர். இந்தத் தகவலை இங்கிலாந்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மிகப் பெரிய கடிகாரம் பழுதடைந்தது



உலகிலேயே மிகப் பெரிய கடிகாரம் லண்டனில் உள்ள பிக்பென் கடிகாரம். பாராளுமன்றத்தின் பொதுச் சபை கட்டடத்தில் உள்ள ஸ்டீபன் கோபுரத்தில் இந்தக் கடிகாரம் உள்ளது. உலகப் புகழ்பெற்ற இந்த பிக்பென் கடிகாரம் தட்ப வெப்ப நிலை மாற்றம் காரணமாக பழுதடைந்துள்ளது.

இதைத் தொடர்ந்து அந்த மிகப் பெரிய கடிகாரம் கீழே இறக்கிப் பழுது பார்க்கப்படுகிறது. இன்று மாலை இந்தக் கடிகாரம் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் கோபுரத்தின் உச்சியில் பொருத்தப்படும். பழுதடைந்த பாகங்களை நீக்கி விட்டு புதிய பாகங்கள் பொருத்தப்படும். இதே போல் 20 ஆண்டுகளுக்கு முன்பு பிக்பென் கடிகாரம் கீழே இறக்கப்பட்டு பழுது பார்க்கப்பட்டது.

## ஈரான் அணுவாயுதம் தயாரிப்பதை நிறுத்தாவிட்டால் அந் நாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுப்போம்

எச்சரிக்கை விடுக்கிறார் ரொனி பிளேயர்

(லண்டன்)

"ஈரான் அணுவாயுதம் தயாரிப்பதைக் கைவிடாவிட்டால் இராணுவ நடவடிக்கை எடுப்போம்" என்று இங்கிலாந்து எச்சரித்து உள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் உச்சி மாநாடு லண்டனில் உள்ள ஹாம்டன் கோர்ட்டில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பேசிய இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர் கூறியதாவது:-

உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக ஈரான் மாறுவதற்கு ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம். ஈரான் தொடர்ந்து மோதல் போக்கை கடைப்பிடித்தால் அதன் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும். ஈரான் சனாதிபதி மக்மூத் அதுமதி நெஜாத் உலக வரை படத்தில் இருந்து இஸ்ரேல் என்ற நாட்டை இல்லாமல் செய்வோம் என்று கூறியது கண்டிக்கத்தக்கது. இதற்கு என்ன பதிலடி கொடுப்பது என்பது பற்றி மேற்கத்திய தோழமை நாடுகளின் கூட்டம் அடுத்த வாரம் நடக்கும் போது முடிவு எடுப்போம்.

மேற்கத்திய நாடுகளின் தலைவர்களுக்கு வேறு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. இதைப் பயன்படுத்திக் கொண்டு நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் சொல்லலாமென ஈரான் சனாதிபதி நினைத்தால், அது மிகப் பெரிய தவறு ஆகும். ஒரு நாட்டின் சனாதிபதி இன்னொரு நாட்டையே இல்லாமல் அழித்து விடுவோம் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.பயங்கரவாதம், அணுவாயுதம் தயாரிப்பது, இஸ்ரேல் ஆகியவை தொடர்பான ஈரானின் அணுகு முறையை ஏற்றுக் கொள்ள முடியாது எனப் பேசினார் ரொனி பிளேயர்.

## ஆந்திராவில் புகையிரதம் ஆற்றுக்குள் தடம் புரண்டது இருநூற்றுக்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என அச்சம்


(ஹைதராபாத்)

ஆந்திராவில் புகையிரதம் கவிழ்ந்து ஆற்றில் விழுந்ததில் 200 பயணிகள் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. இந்த அசம்பாவிதம் பற்றி தெரியவருவதாவது;

ஆந்திராவில் புயல் தாக்கியதால் இரு நாளாக தொடர்ந்து கன மழை பெய்தது. இதனால் ஏரிகள், அணைகள் நிரம்பி வழிகின்றன. அணை உடைப்பை தடுக்க தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் வெளியேறிய நீர் ஊருக்குள் புகுந்து புகையிரத தண்டவாளங்களையும் மூழ்கடித்துள்ளது.

இந்த நிலையில் செகந்திராபாத்தில் இருந்து ரேபள்ளி செல்லும் அதிவேக பயணிகள் புகையிரதம் நேற்றுக் காலை 4.00மணி அளவில் ராமணா பேட்டை அருகே செல்கையில் ஒரு ஆற்றுப் பாலத்தில் தடம் புரண்டது. இதனால்





பத்துப் பெட்டிகள் ஆற்றில் விழுந்தன. அதில் இருந்த பயணிகளும் மூழ்கினர். முதல் தகவல் படி பத்துப்பேர் இறந்ததாக தெரிய வந்தது. ஆனால் அந்தப் பெட்டிகளில் இருந்த 200 இற்கும் மேற்பட்டவர்களும், ஆற்றில் மூழ்கியதால் சாவு 200ஐ தாண்டி இருக்கும் என்றும் அஞ்சப்படுகிறது. விபத்து பற்றி அறிந்ததும் உள்ளூர் மக்கள் விரைந்து வந்து தண்ணீரில் தத்தளித்த வர்களை மீட்டனர். ஏாளமானவர்கள் ஆற்றில் குதித்து தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டவர்களைத் தேடி வரு கிறார்கள். ஆற்றில் புகையிரம் விழுந்ததில் உயிர் தப்பியவர்கள் மரத்தைப் பிடித்தபடி கிளையில் அமர்ந்து இருந்தனர். அவர்களை உள்ளூர் மக்கள் மீட்டனர்.

ஹைதராபாத் மற்றும் பல இடங்களில் இருந்து மீட்புக் குழுவினர் அங்கு விரைந்தனர். இராணுவம் மற்றும் கடற்படையினரும் அங்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். குண்டூர் செகந்திராபாத் இடையே, புகையிரத சேவைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## சதாமின் தம்பி அமெரிக்க பிரிட்டன் அதிபர்களுக்கு தன்னை விடுதலை செய்யக் கோரி கடிதம்

(டுபாய்)

சதாம் ஹுசைனின் தம்பியும் போர்க்குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் சதாம் ஹுசைனுடன் சேர்ந்து குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டவருமான பர்சான் இப்ராகிம் அல் திக்ரிதி இப்போது கைதாகியிருக்கிறார். அவர் அமெரிக்க சனாதிபதி புஷ்ஷிற்கும் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயருக்கும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பதாவது; எனக்கு முதுகுத் தண்டில் புற்று நோய் தாக்கி இருகின்றது. அதற்கு சிகிச்சை பெறுவதற்காக எனக்கு விடுதலை தரவேண்டும். நீதியின் பெயராலும் ஜனநாயகக் கொள்கை வழிநின்றும் இந்தக் கோரிக்கையை வைக்கின்றேன். மனிதாபிமான அடிப்படையில் என் கோரிக்கையை பரிசீலிக்கவேண்டும். நான் ஒரு அப்பாவி. எனக்கு சம்பந்தமே இல்லாத பிரச்சினைக்காக நான் கைது செய்யப்பட்டிருக்கின்றேன் என அந்தக்கடிதத்தில் பர்சான் கூறியிருக்கின்றார்.



ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இஸ்ரேலுக்கு எதிராக நடந்த போராட்டத்தின் போது பாடசாலை மாணவர்கள் இஸ்ரேல் கொடியை எரித்தது போலித் துப்பாக்கியால் சுடுகிறார்கள்.



# கிளி.மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் நிதித்துறை நடுவப்பணியகத்தினர் சிரமதானம்

தமிழீழ நிதித்துறை வருவாய்ப்பகுதி நடுவப்பணியகத்தினரால் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சுகாதார நடைமுறை ஒழுங்கமைப்பினை சீர்செய்யும் வகையில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.00 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை சிரமதானப்பணி (வினைக் கொடைப்பணி) மூலம் துப்புரவாக்கல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. தமிழீழ வருவாய்ப்பகுதி நடுவப் பணியகத்தைச் சேர்ந்த 150 இற்கு மேற்பட்ட பணியாளர்கள் மற்றும் போராளிகள் இணைந்து வைத்தியசாலை வளாகம் மற்றும் நோயாளர் விடுதிகள், வெளிநோயாளர் பகுதிகள் ஆகியவற்றினை முற்று முழுதாக வினைக்கொடைப்பணி மூலம் துப்புரவு செய்ததுடன் வளாகத்திலிருந்த கழிவுகளை முற்றாக உழவு இயந்திரங்கள் மூலம் அப்புறப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் வைத்தியசாலை வளாகத்தில் மழை நீர் தேங்கியிருந்த பகுதிகளில் உழவு இயந்திரங்கள் மூலம் மண்பறித்து நிலத்தை நீர் தேங்கி நிற்காத வகையில் சீர்செய்துள்ளனர்.மற்றும் வைத்திய சாலையின் சகல பகுதிகளும் குறிப்பாக காரியாலயங்கள், சிகிச்சைக் கூடங்கள் என்பனவும் முற்று முழுதாக மேற்படி பணி மூலம் துப்புரவு செய்யப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



# சிறுவர் உரிமை செயற்பாடுகள் காவல்துறையால் முன்னெடுப்பு

**இயற்கைஅனர்த்தத்தினாலும்,கடந்தகால யுத்த நடவடிக்கைகளினாலும் ஏற்பட்ட உள்நாட்டு இடம்பெயர்வுகளால் குடும்ப, சமூக கட்டமைப்புக்கள் சீர் குலைந்துள்ள நிலையில், இளைய தலைமுறையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான கருத்தமர்வு நிகழ்வுகள் தமிழீழ காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.**

இந்த வகையில் கடந்த வியாழன் முல்லை. மாவட்டம், அளம்பில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கருத்தமர்வு நிகழ்வு நடாத்தப்பட்டுள்ளது.

முல்லைத் தீவு காவல்பணிமனைப் பொறுப்பாளர் இ.றோய்காந் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றி வைத்த தைத்தொடர்ந்து அளம்பில் பங்குத்தந்தை வண பிதா யூட் அமலதாஸ் ஆசியுரை வழங்கினார். பாடசாலையின் உப அதிபர் அ.லீனஸின் கருத்துரைகளைத்தொடர்ந்து சிறுவர்கள் உரிமை மீறலும் அதிலிருந்து காப்பதும் என்ற விடய ஆய்வினை



இ.றோய்காந் மேற்கொள்ள சமகாலத்தில் இளம் பெண்கள் குறிப்பாக மாணவ சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விடய ஆய்வினை காவல் துறையின் சிறுவர் மகளிர் விவகாரப் பிரிவுப் பொறுப்பாளர் செ.இமாக்குலேற் மேற்கொண்டர்.



விடய ஆய்வுகள் பற்றிய கருத்துக்களுக்கு செயல் விளக்கம் கொடுப்பதற்கான அரங்க செயற்பாடுகளும் காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்டன.

ஒழுக்கமும் கட்டுப்பாடுமுள்ள எதிர்கால சந்ததியை உருவாக்குவதற்காக நிகழ் காலத்தில் திட்டமிட்டுச் செயற்படும் தமிழீழ காவல்துறையினருக்கு கல்விச் சமூகத்தின் சார்பில் ஆசிரியர் சி.பத்மராஜா நன்றி தெரிவித்துள்ளார்.

# செட்டிகுளத்தில் வாகனவிபத்து கணவன் பலி; மனைவி படுகாயம்

செட்டிகுளம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது மரணமானார். அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மன்னாரிலிருந்து செட்டிகுளம் நோக்கி மணல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக எதிரே உந்துருளியில் சென்றுகொண்டிருந்த தம்பதியினர் மீது மோதியதில் கணவனும் மனைவியும் படுகாயமடைந்தனர். செட்டிகுளம் வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொதுவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போது 36 வயதுடைய வீரசிங்கம் அமிர்தலிங்கம் என்பவர் மரணமானார். இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

# பொது மருத்துவ சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் இன்று காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் ஜெகராஜா அவர்களினால் பொது மருத்துவ சிகிச்சை நடைபெறவுள்ளதால் குறிப்பாக தொய்வு, உயர் குருதியமுக்கம்,மாரடைப்பு, சலரோகம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்களைப் பார்வையிட்டு விசேட சிகிச்சையும் ஆலோசனையும் வழங் கப்படவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான நோயாளர்களை மட்டுமே பார்வை யிடவுள்ளதால் முற்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங் கப்படும். பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பில் உள்ள சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவில் தொடர்பு கொள்ளும் படி பணிப்பாளர் அறியத்தருகின்றார். (கு)

## கலைநிகழ்வு

றோயல் கல்வி நிலைய பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வுகளும் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.நிலைய முதல்வர் ச.குமார் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைச்சிப்பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன் நித்தியாணந்தம் கலந்து கொள்கிறார். (சோ)

# பேருந்து மிதிபலகையிலிருந்து விழுந்த நடத்துனர் காயம்!

பேருந்தின் மிதி பலகையில் இருந்து தவறி விழுந்த நடந்துனர் காயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்டவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அருகாமையில் தேவாலயத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சேர்ந்த சந்திரன் (வயது25) என்னும் பேருந்து நடந்துனரே மேற்படி சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

- கனடா வோட்டர்லூ பகுதியில் -

# இரு சகோதரர்களைக் கொலை செய்த இளைஞர் அமெரிக்காவில் கைது!

கனடாவின் வோட்டர்லூ பகுதியில் கடந்த மாதம் இரு தமிழ் சகோதரர்களை ஊர்தியால் மோதிக் கொன்று விட்டு தப்பியோடிய தமிழ் இளைஞரை அமெரிக்காவில் வைத்து அமெரிக்க உளவுப் பிரிவினரான எப்.பி.ஐ யினரின் துணையுடன் தாம் கைது செய்துள்ளதாக வோட்டர்லூ பகுதிப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் கனடா வோட்டர்லூ பகுதியில் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியில் வைத்து நகுலசிகாமணி சந்திரசேகர் மற்றும் அவரது சகோதரர் சௌமியன் ஆகியோர் ஊர்தியால் மோதிக் கொல்லப்பட்டிருந்தனர்.இவர்களின் கொலையுடன் சம்பந்தப்பட்ட போல் ஜெயராஜா அலெக்சாண்டர் (வயது-21) என்ற ரொரன்ரோவைச் சேர்ந்த் நபரே நியூயோர்க் நகரிற்கு 80 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள கனக்கட் பகுதியில் உள்ள அவரது உறவினர் வீட்டில் ஒளிந்திருந்த வேளை அமெரிக்க உளவுப் பிரிவினரான எப்.பி.ஐ யினரினால் கைது செய்யப்பட்டுள்ளார் என வோட்டர்லூ பொலிசார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட இந்நபர் அமெரிக்காவின் நியூ ஹெவன் பகுதியில் உள்ள நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும், இவரை கனடாவிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் வோட்டர்லூ பகுதி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஊர்தியை தாம் அண்மையில் மீட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் வீதியோர பனம் விதை நடுகைத் திட்டம்

(விசுவமடு)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் பனம் விதை நடுகைத் திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணிக்கு இராமநாதபுரம் மத்தி. கமக்கார அமைப்பு பகுதியில் த.பொ.மே. நிறுவனத் திட்ட அலுவலர் கி.ஆறுமுகம் தலைமையில் பனம் விதைகள் வீதியோர நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வை சுடரேற்றி வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஆரம்பித்து வைத்தார். இதைத் தொடர்ந்து கருத்துரைகளை த.பொ.மே நிறுவன பனை - தென்னை வள அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் இ.புவனேஸ்வரன், வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினார்கள்.

நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை வழங்கினார். இதனைத் தொடர்ந்து வீதியோர பனம் விதை நடுகைத் திட்டத்தினை த.பொ.மே. நிறுவன துணைப்பொறுப்பாளர் ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து 5000 பனம் விதைகள் நேற்று முன்தினம் நாட்டப்பட்டன. நிகழ்வில் இராமநாதபுரம் ம.வி. மாணவர்கள், ஆசிரியர்கள், கமக்கார அமைப்பினர், மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் தமிழீழப் பகுதி எங்கும் பத்து இலட்சம் பனை உற்பத்தித் திட்டத்தின் கீழ் இந் நடவடிக்கை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (46)

# கட்டாக்காலி நாய்களை ஒழிக்க துரித நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழ சுகாதார சேவை ஆகியவற்றின் அனுசரணையுடன் கரைச்சிப் பிரதேச சபையினரின் துரித நடவடிக்கை மூலம் கடந்த 24 ஆம் திகதி முதல் கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.மேற்படி நடவடிக்கையின் மூலம் கடந்த 24 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை 277 கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதெனவும், இவற்றுள் 138 நாய்களை மக்கள் தாமாகவே பிரதேச சபையினரிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகுமென கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் தெரிவித்தார்.மேலும் இதுபோன்று மக்களின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை விரைவில் ஒழித்து விட முடியுமெனத் தெரிவித்துள்ளார்.(சோ)

# பளை தமிழீழ காவல்துறை பணிமனையில் தீர்வுகளைப்பெற யாழ்.மக்கள் முறைப்பாடு

## -சிறிலங்காப் பொலிசாரில் நம்பிக்கையிழப்பு

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று வன்னிப் பகுதியிலுள்ள தமிழீழ காவல்துறையில் தமது முறைப்பாடுகளை பொதுமக்கள் செய்து வருகின்றார்கள். தமிழீழ காவல் துறையினர் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு எதிராளிகளை அழைத்து உரிய பிணக்குகளை விசாரித்து தீர்வுகளையும் வழங்கிவருகின்றமை பொது மக்களிடத்தில் ஆதரவைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள பொலிசாரிடம் முறைப் பாடுகளைச் செய்வதாக இருந்தால் சிங்களம் தெரிந்த இரண்டாம் நபரை அழைத்துச் செல்ல வேண்டி இருப்பதுடன் மொழி தெரியாமையினால் பல்வேறு கஷ்டங்களுக்கும் உள்ளாக வேண்டியிருப்பதாகவும் இத்தகைய செயற்பாடுகளில் இருந்து விடுபடுவதுடன் உண்மைநிலமையை நாங்களே எடுத்துக்கூறி உரிய தீர்வைப் பெறக் கூடியதாக இருப்பதினாலும் தாங்கள் அங்கு சென்று முறைப்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் முறைப் பாடுகளைப்பதிவு செய்வதற்கு தமிழீழகாவல் துறையினர் பளையில் ஒரு அலுவலகத்தை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (41)

# பொன்னாலை கடற்கரையோரம் புதிய இறங்குதுறை நிர்மாணம்

வலிகாமம் மேற்கிலுள்ள பொன்னாலை கடற்படை வலயப் பிரதேசத்தில் புதிய இறங்குதுறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் மேற்படி இறங்குதுறையானது கடற்றொழிலாளர்களின் பாவனைக்காக நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

இந்த இறங்குதுறையானது எதிர்வரும் நான்காம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் பொருளாதார பாதுகாப்புத் தொடர்பாளர் ஜோன் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

இத்திறப்புவிழா வைபவத்தில் வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்தாஸ், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் க.தவரட்ணம், தென்னிந்தியத் திருச்சபையின் வட்டுக் கோட்டைப் போதகர் ரி.எஸ்.யோசுவா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (37)

## - உயர் பாதுகாப்பு வலயமென்ற போர்வையில் -

# விவசாயச் செய்கைக்கு தொடரும் இராணுவ தடையால் அரியாலை கிழக்கு மக்கள் பெரும் விசனம்!

(யாழ்ப்பாணம்)

**அரியாலை கிழக்கு இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் விவசாயச்செய்கையை மேற்கொள்வதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்படவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

அரியாலைப்பகுதியில் கடந்த ஆறுவருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பெருமளவான விவசாய நிலங்கள் முடக்கப் பட்டிருக்கின்றன. இதனால் இந்தப் பகுதியில் விவசாயம் செய்யும் குடும்பங்களின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரியாலை கிழக்குப் பகுதியில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கென விவசாயிகளுக்கு படையினரால் விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டது. விசேட அடையாள அட்டை வழங்கப்பட்ட போதிலும் பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்படவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இதேவேளை அரியாலை உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் சில இடங்கள் விவசாயச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. படையினரால் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களை விட கூடுதலான பிரதேசங்கள் அனுமதிக் கப்படாமல் இருக்கின்றன.

படையினரால் அனுமதிக்கப்படாத விவசாய நிலங்களில் பயிற்செய்கை மேற்கொள்ளுகின்ற விவசாயிகளது பொருளாதாரம் பெரும் பாதிப்புக் குள்ளாகி உள்ளதென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (கீ)

# ஆணின் சடலம் கரையொதுங்கியது!

யாழ்.அனலைதீவு கடற்கரை ஓரத்தில் நேற்று முன்தினம் காலை ஆண்ஒருவரது சடலம் கரையொதுங்கியுள்ளது. அழுகியநிலையில் கரையொதுங் கிய இச்சடலம் பற்றி அப்பகுதிக் கடற்றொழிலாளர்களால் தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த பொலிசார் சடலத்தை மீட்டு யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.கரையொதுங்கிய சடலம் அழுகிய நிலையிலும், தலை துண்டாக்கப்பட்ட நிலையிலும் உள்ளதாகப் பொலிசார் கூறினர். (33)

# யாழ்ப்பாணம் மாநகரசபையில் உள்ளூராட்சி வார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் நடத்தப்பட்ட உள்ளூராட்சி உரை நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா கடந்த வியாழனன்று யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகரசபை செயலாளர் மதுமதி வசந்தகுமார் தலைமையில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கல விளக்கினை உள்ளூராட்சி ஆணையாளர், மாநகரசபை ஆணையாளர் ஆகியோர்ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உள்ளூராட்சி ஆணையாளர் மாநகரசபை ஆணையாளர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அதையடுத்து கலைநிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர். (கீ)

# அராலி மத்தி பகுதியில் பனம் விதைகள் நடுகை

(வலிகாமம்)

யாழ்.வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள அராலி மத்தி ஊரத்திப் பகுதியில் சங்கானை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் 2,500 பனம் விதைகள் நடப்பட்டுள்ளன. சங்கானை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் வ.முத்துராசா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி பனை நடுகைத் திட்டம் இடம்பெற்றது.

சங்கானை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் எஸ்.செல்வராசா, அபிவிருத்திக் கிராம அலுவலர் எஸ்.பாலசிங்கம், சங்கத்தின் மேற்பார்வையாளர் பெ.தேவானந்தம், கல்வி உத்தியோகத்தர் அ.நிஷாந்தன் மற்றும் நெறியாளர் குழு உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு பனம் விதைகளை நாட்டிவைத்தனர். (37)

## இராணுவத்தாலும் போராலும்

# 20 வருடங்களில் 25 இலட்சம் பனைகள் யாழ்.குடாநாட்டில் அழிவு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் கடந்த இருபது வருடங்களில் இருபத்தி ஐந்து இலட்சம் பனை மரங்கள் சிறிலங்கா அரசு நடத்திய கொடூரமான யுத்தத்தினாலும், இராணுவ தேவைகளுக்காகவும், அழிக்கப்பட்டிருப்பதாக பனை அபிவிருத்தி சபையின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார். தொடர்ந்து இங்கு நிலை கொண்டுள்ள படையினர் பதுங்கு குழிகள் அமைப்பதற்கும், முன்னணி காவலரண்களைப் பலப்படுத்துவதற்கும், பனை மரங்களை அழித்து வருவதாகவும், இயற்கை சூழலை அழிப்பதன் மூலம் தமிழ் மக்களினுடைய வாழ்வாதாரத்தையும், சுற்றுச் சூழலையும், சிதைப்பதற்கு சிறிலங்கா அரசின் திட்டமிட்டதொரு நடவடிக்கையாகவே. இது அமைந்து இருப்பதாகவும், பனை வளம் தமிழ் இனத்தினுடைய தன்னிகரில்லா சொத்து என்றும் எதிரியானவன் அழித்தாலும், நாம் பனை வளத்தைப் பெருக்கத் தொடர்ந்தும் பாடுபடுவோம் என்றும் அவர் தெரிவித்தார். (28)

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவகங்கள் குறித்து தகவல் தருக!

## - யாழ். சுகாதார சேவைப் பணிப்பாளர் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இயங்குகின்ற உணவகங்கள், குளிர்பான விற்பனை நிலையங்கள் சுகாதார முறைகளை பின்பற்றாமல் தொடர்ச்சியாக இயங்கினால் அவை தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என யாழ். மாவட்டப் பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இயங்குகின்ற உணவகங்கள், குளிர்பான விற்பனை நிலையங்கள் சுகாதார முறைப்படி இயங்க வேண்டும். அவ்வாறு இயங்காத நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த சில நாட்களுக்கு முன் யாழ்ப் பாணத்தில் இயங்குகின்ற இரண்டு உணவகங்களில் விற்கப்பட்ட ஐஸ் கிறீம் வகையில் மலத்தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற உணவகங்கள், குளிர் பான விற்பனை நிலையங்கள் என்பவற்றில் பேணப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் உணவுப் பொருட்கள் பாவனையாளருக்கு எவ்வாறு பரிமாறப்பட வேண்டும் என்பவை பற்றிய நடைமுறைகள் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப் பட்டிருக்கின்றது.

சுகாதார திணைக்களத்தால் வழங்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக இயங்காத உணவகங்கள் இருந்தால் அவை தொடர்பான விபரங்களை சுகாதாரம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப் படுத்தப்படுவதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (கீ)

# யாழ். தமிழர் புனர்வாழ்வுக்கழக புதிய செயலக திறப்புவிழா

தமிழர்புனர்வாழ்வுக் கழக யாழ்.மாவட்டத்திற்கான செயலகம் நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணிக்கு இல.141,கோவில் வீதியில் அகதிகள் புனர்வாழ்வுக்கழக தலைவர் நல்லதம்பி அவர்களால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அகவணக்கத்துடன் ஆரம்பமான இந் நிகழ்வில், மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து பெயர்ப் பலகையை நிகொட் பிரதித்திட்டப்பணிப்பாளர் எஸ்.நவரட்ணராஜா மற்றும் யாழ்.மாவட்ட நியாப்பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஸ்ணன் ஆகியோரால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

தொடர்ந்து யாழ்.மாவட்டத் தமிழர்புனர்வாழ்வுக்கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வி.தியாகராஜாவின் தலைமையில் நிகழ்வு . ஆரம்பமானது.

பின்னர் கடந்த வருடம் நிகொட் திட்டத்தில் சிறப்பாக சேவையாற்றிய நான்கு பணியாளர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளரால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.இச் செயலகமானது இது வரைகாலமும் 82/1, கே.கே.எஸ். வீதி, கொக்குவிலில் இயங்கிவந்தமை குறிப் பிடத்தக்கது. (28)







# சனாதிபதித் தேர்தல் முடிவு எவ்வாறு இருக்கும்?

சிறிலங்காவில் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாவது சனாதிபதிக்கான தேர்தலில் வெற்றி பெறப்போவது யார்? ரணில் விக்கிரமசிங்கவா? மகிந்தராஜபக்ஷவா? இந்தக் கேள்விக்கு ஊகித்துப் பதில் கூற தென்னிலங்கை ஆய்வாளர்கள் திணறுகின்றனர். இம்முறை இவர்கள் எவருக்குமே பாரிய வேறுபாடான அளவில் மக்கள் ஆதரவு காணப்படவில்லை என்பதே இதற்குக் காரணமாகும். அதாவது கடுமையான போட்டி நிலவுவதே காரணமாகும்.

தென்பகுதியில் மக்கள் இத்தேர்தல் குறித்து இத்தேர்தலில் யாருக்கு ஆதரவாக வாக்களிக்கப் போகிறார்கள் என்பது குறித்த குழப்பமான நிலையும் காணப்படுவது இதற்கு மற்றொரு காரணமாகும்.

இம்முறை தென்பகுதியில் அதிலும் கொழும்பு நகரில் கூட தேர்தல் ஒன்று நடைபெறப்போகின்றது என்பதற்கான வழமையான அடையாளங்கள் எவையும் காணப்படவில்லை. அதாவது வழமையாகக் காணப்படுவது போன்ற பாரிய அளவிலான கட்டவுட்டுகள், சுவர்களை மறைத்து ஆயிரக்கணக்கில் ஒட்டப்படும் சுவரொட்டிகள், கொடி அலங்காரங்கள் என்பவற்றைக் காணமுடியவில்லை.

தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் கூட இவையெல்லாம் சுவர்கள், வீதிகளை ஆக்கிரமித்திருந்தன. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மேலும் பல்லாயிரக் கணக்கில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் தேர்தல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின் தேர்தல் திணைக்களத்தின் உத்தரவின் பேரில் அகற்றப்பட்டன.





இப்பொழுது தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டக் கூடாது எனத் தேர்தல் திணைக்களம் கடுமையாக உத்தரவிட்டிருப்பதால் அவற்றைக் காண்பது அரிதாகவே உள்ளது.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கு மக்கள் வருகையும் குறைவாகத்தான் காணப்படுகிறது. கட்சி ஆதரவாளர்கள் தத்தமது கொடிகள் சகிதம் வந்து குவிந்தாலும் தேர்தல் பிரச்சாரம் யாரை இலக்கு வைத்து நடத்தப்படுகிறதோ அவர்கள் பெருமளவில் காணப்படவில்லை என்றே நோக்கர்கள் கூறுகின்றனர்.

எனினும் சாதாரணமாக மக்களிடம் எழுந்தமானமாக எடுக்கப்படும் கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நகர்ப் பகுதிகளிலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு கிராமப் பகுதிகளிலும் அதிக ஆதரவு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

தங்களைப் போன்ற கிராமப் பகுதியைச் சேர்ந்த அல்லது பின்தங்கிய மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் சனாதிபதியானால் தமது பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு தமக்கு நன்மை செய்வார் என மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் கிராமப்பகுதி மக்கள் நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு மகிந்தவினதும் ரணிலினதும் தோற்றங்களும் காரணமாக அமைவதாக தென்பகுதி ஆய்வாளர் ஒருவர் கூறினார். அதாவது மகிந்த ராஜபக்ஷவின் வேட்டி, சட்டை, சால்வை அணிந்த தோற்றமும் ரணிலின் கோட் சூட் அணிந்த தோற்றமும் இவ்வாறான பாகுபாட்டை ஏற்படுத்தியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ கிராம வாழ்க்கை அல்லது பின்தங்கிய ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் வாழ்க்கை முறையில் வாழ்ந்தவர் அல்ல எனவும் அவரது பரம்பரை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிக வசதிமிக்க வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை ஜே.வி.பியில் உள்ள இளைஞர்கள் மேற்கொண்டுவரும் வாழ்வா? சாவா? என்ற ரீதியிலான பிரச்சாரம் காரணமாக மகிந்த ராஜபக்ஷவின் பிரச்சாரக் கூட்டங்களை கட்டுவதாகவும் ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் ஏற் பாட்டில் நடைபெறும் கூட்டங்கள் மகிந்த வுக்கு நம்பிக்கை அளிப்பதாக இல்லை என்றும் கூறப்படுகிறது.

இதற்கு சனாதிபதி சந்திரிகாவின் குழப்பமான நிலை காரணமாக அமைகின்றது. அதாவது சனாதிபதி சந்திரிகா கட்சித் தலைவராக இன்னமும் இருப்பதாலும் மகிந்தராஜபக்ஷவின் வெற்றி முற்று முழுதாக உறுதிப்படுத்தப்படாத ஒன்றாக இருப்பதனாலும் கட்சி அமைப்பாளர்கள் இதனை எவ்வாறு கையாள்வது என்று திணறி வருகின்றனர். இதனால் தேர்தல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட முடியாமலும் பூரணமாக கைவிட்டு விட முடியாமலும் இருப்பதன் காரணமாக அவர்களின் செயற்பாடுகள் மந்த கதியிலேயே உள்ளன.

எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் மகிந்தவுக்கு வாக்களிக்காது விட்டு ஐ.தே.க ஆட்சி பீடம் ஏறிவிட்டால் தமக்கு மோசமான நிலை ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் ஒருபுறமும் வெற்றி பெற்றால் ஜே.வி.பி தமது கட்சியை விழுங்கிவிடுமோ? என்ற அச்சம் மறுபுறமும் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இப்பொழுது மகிந்தவின் மேடைகள் சிலவற்றில் சனாதிபதி சந்திரிகா தோன்றி உரையாற்றுகின்ற போதும் அவரின் உரை மகிந்தவை விட ரணிலுக்கே சாதகமாக இருப பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மத்தியில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

எனினும் இனவாதிகள் ஆதரவு தமக்கு பூரணமாக கிடைக்கும் என்ற நம்பிக்கை மகிந்த ராஜபக்ஷவுக்கு உண்டு. இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் முறையின் கீழ் தீர்வு என்ற அவரது வாக்குறுதி இனவாதிகளை அவர் பக்கம் திரட்டியுள்ளது.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரச்சாரத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது வலியுறுத்தப்படும் விடயமாயினும் அதுவும் சமாதான விரும்பிகளின் வாக்கு வங்கியை தட்டிப் பறிக்கும் நோக்கம் கொண்டதாகவே உள்ளது. இதனை எவ்வாறு செய்யப்போகிறார்? என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது, சனாதிபதி சந்திரிகா 1994 இல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்று கூறி 62 சதவீதமான மக்கள் வாக்குகளைப் பெற்றுவிட்டு சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் தமிழ்மக்கள் மீது போர் தொடுத்தார்.

அதே போன்றதொரு வியூகம்-பன்னாட்டு வலைப்பின்னல் ஒன்றின் மூலம் புலிகளை ஓரம் கட்டி தமிழ் மக்களின் உரிமைப் போரை அழிக்கும் நோக்கம் கொண்டவராக ரணில் இருக்கின்றார். அதற்கான அத்திவாரத்தை அவர் தனது கடந்த ஆட்சிக் காலத்தில் இட்டு வந்திருக்கிறார்.

இது ஒருபுறம் இருக்க அவரது பொருளாதாரக் கொள்கையும் வலது சாரிப் போக்கும் மட்டுமல்ல மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் அணி சேர்ந்திருப்பதும் பல முதலீட்டாளர்களை ரணில் பக்கம் தள்ளியுள்ளது. இதன் காரணமாக அவர்களதும் அவர்களைச் சார்ந்தவர்களதும் ஆதரவு ரணிலுக்கு உள்ளது.

இப்பொழுது அநேகமாக தென்னிலங்கை தனியார் ஊடகங்கள் ரணிலுக்கு சாதகமானவையாகவே காணப்படுகின்றன. இவரது தேர்தல் பிரச்சாரத்தில் பெரும் பங்கை அவையே வகிக்கின்றன.

இப்பொழுது தென்பகுதி ஊடகங்கள் கருத்துக் கணிப்பு என்ற பெயரில் கேலிக் கூத்துக்களை நடத்தி வருகின்றன. அரச தொலைக்காட்சியும் தனியார் தொலைக்காட்சியொன்றும் நடத்திவரும் கருத்துக்கணிப்புகள் வெளிப்படுத்தும் முடிவுகள் இதன் உச்சக் கட்டமாகும். கையடக்கத்தொலைபேசிமூலம் நடத்தப்படும் இந்தக்கருத்துக் கணிப்பில் இரண்டு நிறுவனங்களினதும் முடிவுகள் நேர் எதிரானவையாக இருக்கின்றன. அதாவது குறிப்பிட்ட கையடக்கத்தொலைபேசிப் பாவனையாளர்களே இந்தக் கருத்துக் கணிப்பில் பங்கு கொண்டு இருக்கையில் முடிவுகள் மட்டும் நேர் மாறாக இருப்பது விசித்திரமான ஒன்றுதான். இது இக் கருத்துக் கணிப்புகள் மீது அவ நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

அல்லது கருத்துக்கணிப்பில் பங்கேற்கும் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள் அந்தத் தொலைக்காட்சி நிறுவனங்கள் மீது நம்பிக்கை அற்றவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறான நிலையில் மகிந்தவுக்கு ஆதரவானவர்கள் கூடிய அளவில் அரச தொலைக்காட்சிக் கருத்துக்கணிப்பிலும் ரணிலுக்கு ஆதரவாளர்கள் தனியார் தொலைக்காட்சியின் கருத்துக் கணிப்பிலும் கூடிய அளவில் கலந்துகொண்டிருக்க வேண்டும்.

மொத்தத்தில் கருத்துக்கணிப்புகள் காட்டும் முடிவுகளைக் கொண்டு எந்த ஒரு ஊகத்துக்கும் வந்துவிட முடியாத நிலையையே இது ஏற்படுத்துகின்றது. இதேவேளை பிரதமர் என்ற ரீதியில் மகிந்த ராஜபக்ஷ கொண்டுள்ள அதிகாரம் அரச ஊடகங்களை முற்று முழுதாகப் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்தவும் அரச வளங்களைப் பயன்படுத்தவும் அவருக்கு வசதியாக உள்ளது. இராணுவம் பொலிஸ் துறைகளை அவர் பயன்படுத்துவதுடன் ஏனைய வளங்களையும் பயன்படுத்துவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதும் தேர்தல் வெற்றிக்காக இதனையெல்லாம் அவர் பொருட்படுத்தப்போவதில்லை.

அத்துடன் ஜே.வி.பி யுடன் அவர் வைத்துள்ள கூட்டும் அவர் ஆளும் கட்சியாக இருப்பதும் மறுபுறத்தில் அவருக்குப் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அதாவது கடந்த 11 வருட கால ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சலிப்பு இறுதி ஒன்றரை வருட காலம் ஜே.வி.பி யுடன் இணைந்து நடத்திய ஆட்சியின் போது ஆட்சியில் ஏற்பட்ட தேக்க நிலை என்பன அவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை ஆட்சியாளருக்கு எதிராக வீசும் எதிர்ப்பலை ரணிலுக்குச் சாதகமாகும். விலைவாசி ஏற்றம், தேர்தல் வாக்குறுதிகளை அரசாங்கம் சரிவர நிறைவேற்றாமை என்பன போன்ற விடயங்கள் ரணிலுக்குச் சாதகமாகும்.

ஆனால் அவ்வாறானதொரு நிலையில்தான் 2001 டிசம்பரில் ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தை கைப்பற்ற முடிந்தது. ஆனால் 2004 ஏப்ரல் தேர்தலில் அவரால் வெற்றிபெற முடியாமைக்கு சாதாரண மக்களை அவரது செயற்பாடுகள் சென்றடையாமையும் ஒரு காரணமாகக் கூறப்பட்டது.

எவ்வாறாயினும் கழுத்துப் பிடியான போட்டி ஒன்றை எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் சந்திக்கின்றது. இப்போட்டியில் இவ்விரு வேட்பாளர்களினதும் வெற்றியினால் பாதிக்கப்படப் போவோர் பட்டியல், பயனடையப் போவோர் பட்டியல் எனவும் இரண்டிரண்டு பட்டியல்கள் உள்ளன.

மகிந்த வெற்றி பெற்றால் பயனடையப் போவோர் பட்டியலில் ஜே.வி.பி நிச்சயமாக உள்ளது. பாதிக்கப்படுவோர் பட்டியலில் பண்டாரநாயக்க குடும்பம் உள்ளது. அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஐ.தே.க வின் தலைமைப் பொறுப்பும் பறிபோகலாம்.

ரணில் வெற்றி பெற்றால் பண்டாரநாயக்க குடும்பம் பயனடையும் என சனாதிபதி சந்திரிகா நினைக்கிறார். ஆனால் பாதிக்கப்படுவோர் பட்டியலில் முதலிடத்தில் ஜே.வி.பி யும் பின்னரே ராஜபக்ஷ குடும்பமும் உள்ளது. இது தென்னிலங்கை அரசியலில் உள்ள நிலவரம். ஆனால் தேர்தல் முடிவு குறித்து ஊகம் முன் எப்பொழுதும் இல்லாதவாறு சிக்கலானதாகவே உள்ளது.

**வேலவன்**

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

## சங்கானை உதவி அரச அதிபர்பிரிவு

யா/ச/2758 திருமதி. பூபதி இராசலிங்கம்
யா/ச/2787 திரு. சுந்தரம் சுப்பிரமணியம்
யா/ச/2789 திரு. முத்துக்குமாரு குழந்தைவேலு
யா/ச/2861 திரு. ஆறுமுகம் குருலிங்கம்
யா/ச/2862 திருமதி. பேரின்பவல்லி சரவணமுத்து
யா/ச/2869 திரு. காசிப்பிள்ளை பொன்னுத்துரை
யா/ச/2918 திருமதி. இராசலட்சுமி சண்முகநாதன்
யா/ச/2920 திரு. சுப்பிரமணியம் தியாகராசா
யா/ச/ 2991 திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை
யா/ச/3034 திருமதி. மனோன்மணி பாலசிங்கம்
யா/ச/3055 திரு. கந்தையா கதிரவேல் ஐயா
யா/ச/3058 திருமதி. பரமேஸ்வரி கனகரத்தின்ம்
யா/ச/3083 திருமதி. சிந்தாமணி சின்னத்துரை
யா/ச/3105 திருமதி. வேதமணி கோபாலகிருஷ்ணன்
யா/ச/3112 திருமதி. தேவநாயகி இராசையா
யா/ச/3117 திரு. கந்தையா சுப்பிரமணியம்
யா/ச/3146 திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம்
யா/ச/3154 திருமதி. பாக்கியம் சின்னவன்
யா/ச/3194 திருமதி. இராசாம்பிகை தில்லையம்பலம்
யா/ச/ 3201 திருமதி. திரவியம் ஆலாலசுந்தரம்
யா/ச/3202 திரு. வேலுப்பிள்ளை மயில்வாகனம்
யா/ச/3203 திருமதி. தேம்பாமலர் காசிப்பிள்ளை
யா/ச/ 3214 திருமதி. திருமகள் கனகரத்தினம்
யா/ச/3261 திருமதி. கருணாநிதி இரத்தினராசா
யா/ச/3304 திருமதி. இரத்தினேஸ்வரி கந்தையா
யா/ச/3308 திருமதி. நாகம்மா நடராசா
யா/ச/ 3317 திரு. அருணாசலம் இராமசாமி
யா/ச/ 3320 திருமதி. சின்னம்மா கந்தசாமி
யா/ச/ 3329 திரு. நல்லதம்பி சீவரத்தினம்.
யா/ச/3331 திரு. சுப்பையா செல்வநாயகம்
யா/ச/ 3393 திரு. கிருஷ்ணர் இராசையா
யா/ச/3416 திருமதி. மாரிமுத்து தம்பிராசா
யா/ச/3419 திரு. இலங்கநாதன் கந்தசாமி.
யா/ச/3422 திரு. பொன்னுச்சாமி தருமலிங்கம்
யா/ச/3430 திருமதி. பாக்கியம் செல்வராசா
யா/ச/3486 திருமதி. விசாகபூசணி முருகையா
யா/ச/3502 திருமதி. அன்னபூரணம் கந்தசாமி
யா/ச/3559 திரு. துரைச்சாமி வாமதேவன்
யா/ச/ 3646 திருமதி. தனலட்சுமி பரராசசிங்கம்
யா/ச/3662 திரு. செல்லையா வைரமுத்து
யா/ச/ 3670 திரு. நாகலிங்கம் கந்தையா
யா/ச/3750 திருமதி. பரமேஸ்வரி சிவப்பிரகாசம்
யா/ச/ 3760 திரு. வைத்திலிங்கம் பழனித்துரை
யா/ச/3778 திரு. சபாபதிப்பிள்ளை இராஜகோபால்
யா/ச/ 3804 திரு. சின்னத்தம்பி வினாயகமூர்த்தி
யா/ச/\ 3805 திரு. பொன்னையா கனகரத்தினம்
யா/ச/ 3806 திரு. சின்னத்தம்பி வினாயகமூர்த்தி
யா/ச/ 3873 திருமதி. புஸ்பராணி தியாகராஜா
யா/ச/3882 திரு. துரையப்பா பரமசிவம்
யா/ச/3895 திரு. தம்பு சோமலிங்கம்
யா/ச/3918 திரு. சிவானந்தகுருக்கள் சுப்பிரமணியசர்மா
யா/ச/ 3947 திருமதி. முத்துமாலை சின்னையா
யா/ச/ 3966 திரு. மார்க்கண்டு பேராயிரவன்
யா/ச/3986 திருமதி. இலட்சுமி கணபதிப்பிள்ளை
யா/ச/4020 திருமதி. செல்லம் வைத்திலிங்கம்
யா/ச/ 4059 திரு. ஆறுமுகம் வைரமுத்து
யா/ச/4062 திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம்
யா/ச/ 4071 திருமதி. செல்வராணி தாமோதரம்பிள்ளை
யா/ச/ 4174 திரு. இராமலிங்கம் துரைசிங்கம்
யா/ச/ 4193 திரு. சண்முகம் சிவதாசன்
யா/ச/4212 திருமதி. சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை
யா/ச/4223 திருமதி. செல்வம் குமாரதாசன்
யா/ச/4237 திருமதி. பாக்கியம் செல்லத்துரை
யா/ச/4257 திருமதி. தங்கரத்தினம் சிவஞானம்
யா/ச/ 4270 செல்வன். செல்லத்துரை பரணிதரன்
யா/ச/4283 திருமதி. சிவகங்கை நவரத்தினம்
யா/ச/4301 திரு. பொன்னையா சுப்பிரமணியம்
யா/ச/ 4303 திருமதி. நவரத்தினம் கணேஸ்
யா/ச/ 4342 திரு. முத்துவேலு சண்முகநாதன்
யா/ச/ 4346 செல்வி. கலாநாயகி சண்முகநாதன்
யா/ச/ 4347 திருமதி. தெய்வானை மாரிமுத்து
யா/ச/ 4394 திருமதி. மேரி திரவியராசா
யா/ச/ 4402 திரு. ஆறுப்பிள்ளை இராஜநாயகம்
யா/ச/ 4419 திருமதி. சிவபாக்கியம் பொன்னையா
யா/ச/ 4424 திருமதி. சிவனேஸ்வரி சோமசுந்தரம்
யா/ச/4437 திரு. மாதவன் சிவசுப்பிரமணியம்
யா/ச/4499 திருமதி. பஞ்சநாயகி முருகுப்பிள்ளை
யா/ச/4511 திரு. கதிர்காமு சிவஞானமூர்த்தி
யா/ச/ 4515 திரு. சங்கரப்பிள்ளை கணேசன்
யா/ச/ 4551 திரு. கந்தையா தங்கரத்தினம்
யா/ச/4573 திருமதி. சத்தியபவானியம்மா தங்கராசிங்கம்
யா/ச/ 4579 திரு. சிதம்பரப்பிள்ளை முருகவேல்
யா/ச/ 4587 திருமதி. சரஸ்வதிதேவி நாகரத்தினம்
யா/ச/ 4608 திருமதி. தங்கச்சிப்பிள்ளை கனகராயன்
யா/ச/4637 திரு. கதிர்காமு சின்னத்தம்பி
யா/ச/ 4689 திரு. நமசிவாயம் வைரமுத்து
யா/ச/4691 திரு. செல்லத்துரை புவனசுந்தரம்
யா/ச/ 4746 திரு. வினாசித்தம்பி மார்க்கண்டு
யா/ச/4755 திரு. செல்லையா குணநாயகம்
யா/ச/4762 திருமதி. அன்னம்மா திருநாவுக்கரசு
யா/ச/4786 திரு. கதிரவேலு அருளம்பலம்
யா/ச/ 4801 திரு. சின்னவன் கதிரவேலு
யா/ச/ 4813 திருமதி. சரஸ்வதி இராசதுரை
யா/ச/4817 திருமதி. செல்லம்மா பிரான்சிஸ்
யா/ச/ 4821 திருமதி. தங்கம்மா சோமசுந்தரம்
யா/ச/ 4827 திரு. பொன்னையா கிருஷ்ணசாமி
யா/ச/ 4857 திரு. வயித்தி கணேசு
யா/ச/4862 திருமதி. சின்னம்மா குமாரசாமி
யா/ச/ 4865 திரு. வேலாயுதர் கணபதிப்பிள்ளை
யா/ச/4866 திரு. இளையவன் அப்பையா
யா/ச/ 4898 திரு. வாரிக்குட்டி துரைராசா
யா/ச 4899 திரு. பொன்னம்பலம் ஆறுமுகம்
யா/ச/4904 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
யா/ச/4908 திரு. கிருஷ்ணன் நடராசா
யா/ச/4917 திருமதி. முத்தாச்சி கணபதிப்பிள்ளை
யா/ச/ 4927 திரு. வையாபுரி இராமன்
யா/ச/ 4961 திரு. இளயவர் செல்லப்பா
யா/ச/4983 திரு. முதலி வயிரமுத்து
யா/ச/ 4991 திரு. கோவிந்தர் கந்தசாமி
யா/ச/4993 திருமதி. அன்னலட்சுமி முருகேசம்பிள்ளை
யா/ச/ 5014 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
யா/ச/5031 திருமதி. அரியம்மா கணபதி
யா/ச/5043 திருமதி. செல்லம்மா செல்லையா
யா/ச/ 5049 திருமதி. தில்லைநாயகி மயில்வாகனம்
யா/ச/ 5054 திரு. சின்னத்துரை சிதம்பரமூர்த்தி
யா/ச/5063 திரு. ஆறுமுகத்தான் மாணிக்கம்
யா/ச/5077 திரு. சரவணமுத்து நாகலிங்கம்
யா/ச/ 5090 திரு. நாகமுத்து நன்னித்தம்பி
யா/ச/ 5095 திரு. சின்னத்துரை செல்வரத்தினம்
யா/ச/5117 திரு. சின்னத்துரை சுந்தரலிங்கம்
யா/ச/5126 திரு. வெள்ளைசாமி கருப்பையாப்பிள்ளை
யா/ச/ 5127 திரு. தம்பு நேசராசா
யா/ச/5154 திருமதி. தங்கம்மா இராமுப்பிள்ளை
யா/ச/5236 திரு. முருகன் செல்லக்கண்டு
யா/ச/ 5239 திருமதி. தங்கமணி பாலசிங்கம்
யா/ச/ 5262 திரு. சின்னத்துரை வினாசி
யா/ச/5268 திருமதி. இராசு முருகன்
யா/ச/ 5309 திரு. பொன்னம்பலம் கார்த்திகேசு
யா/ச/ 5313 திரு. சிவப்பிரகாசம் கயிலநாதன்
யா/ச/ 5362 திரு. சிவஞானம் கந்தசாமி
யா/ச/ 5394 திரு. மாணிக்கம் பொன்னுத்துரை
யா/ச/5410 திரு. வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
யா/ச/ 5413 திருமதி. பத்மாவதி சுப்பிரமணியம்
யா/ச/5414 திரு. வல்லிபுரம் குணசிங்கம்
யா/ச/ 5439 திருமதி. அன்னபூர்ணம் கந்தசாமி
யா/ச/5459 திரு. குமரையா தங்கராசா
யா/ச/ 5505 திரு. ஜோச்கந்தையா ஜெயராஜசிங்கம்
யா/ச/ 5522 திருமதி. சோமாவதி சிவபாலசிங்கம்
யா/ச/ 5543 திரு. நாகநாதர் கந்தசாமி
யா/ச/ 5549 திருமதி. வள்ளிநாயகி அருளானந்தம்
யா/ச/5581 திருமதி. கனகம்மா கயிலாயபிள்ளை
யா/ச/ 5620 திரு. சோதிப்பிள்ளை இரத்தினம்
யா/ச/5623 திரு. செல்லத்துரை இரங்கநாதன்
யா/ச/ 5626 திருமதி. மகலாட்சுமி கந்தசாமி
யா/ச/ 5637 திரு. அருணாசலம் அமிர்தலிங்கம்
யா/ச/5650 திரு. செல்லத்துரை பொன்ராசா
யா/ச/5725 திரு. விஸ்வநாதர் ஏரம்பு
யா/ச/ 5737 திரு. பரமசாமி அருளானந்தசிவம்
யா/ச/ 5767 திரு. செல்லையா நடேசு
யா/ச/ 5775 திருமதி. செல்லம்மா வயிரவன்
யா/ச/ 5780 திரு. ஆறுமுகம் தணிகாசலம்பிள்ளை
யா/ச/ 5786 திரு. சடையன் அப்புக்குட்டி
யா/ச/ 5824 திரு. கந்தையா சுந்தரராசா
யா/ச/ 5848 திருமதி. புனிதமலர் பஞ்சலிங்கம்
யா/ச/ 5849 திருமதி. சிவபாக்கியம் செந்திநாதன்
யா/ச/ 5852 திரு. நாகன் கணபதிப்பிள்ளை
யா/ச/ 5855 திரு. கந்தையா குமாரசாமி
யா/ச/ 5859 திரு. பெரியதம்பி கனகரத்தினம்
யா/ச/5875 திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்
யா/ச/5876 திரு. சரவணமுத்து ஆறுமுகசாமி
யா/ச/ 5891 திருமதி. பரமேஸ்வரி சண்முகம்
யா/ச/5944 திருமதி. புனிதவதி கனகரத்தினம்
யா/ச/5948 திருமதி. சிவபாக்கியம் ஆறுமுகம்
யா/ச/ 5952 திருமதி. தவலட்சுமி சற்குணசிங்கம்
யா/ச/5962 திருமதி. அன்னலட்சுமி துரைரெத்தினம்
யா/ச/ 5977 திரு. வேலாயுதம் பொன்னுச்சாமி
யா/ச/ 6007 திருமதி. அன்னலட்சுமி கனகசபை
யா/ச/6038 திருமதி. ஆச்சிப்பிள்ளை பொன்னுத்துரை
யா/ச/ 6102\ திரு. வேலுப்பிள்ளை இளையதம்பி புவனேஸ்வரன்
யா/ச/ 6127 திருமதி. சிவயோகமலர் சிதம்பரப்பிள்ளை
யா/ச/ 6145 திரு. கந்தையா ஞானசேகரம்
யா/ச/ 6164 திரு. சடாசிவம் தருமலிங்கம்
யா/ச/ 6165 திரு. வயிரவன் செல்லையா
யா/ச/ 6178 திருமதி. வள்ளியம்மை கந்தையா
யா/ச/ 6182 திரு. நாகநாதர் அமிர்தலிங்கம்
யா/ச/ 6192\ திரு. வல்லிபுரம் கருணநாதன்
யா/ச/ 6207 திரு. செல்லத்துரை தெட்சணாமூர்த்தி
யா/ச/ 6226 திரு. கதிரவேலு யோகரத்தினம்
யா/ச/6254 திரு. முருகேசு கதிர்காமநாதன்
யா/ச/ 6293 திரு. கனகசபை பரமநாதன்
யா/ச/ 6318 திருமதி. சிவனேசம் சோமசுந்தரம்
யா/ச/6342 திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்
யா/ச/ 6352 திருமதி. திலகவதி கனகசபை
யா/ச/6420 திரு. மார்க்கண்டு தம்பிராசா
யா/ச/6452 திருமதி. தங்கச்சியம்மா இலச்சுமணர்
யா/ச/6505 திருமதி. கருணாதேவி சிவபாதசுந்தரம்
யா/ச/6510 திருமதி. சிவராசேஸ்வரி சிவராஜேஸ்வரன்
யா/ச/ 6532 திரு. இராமலிங்கம் சண்முகநாதன்
யா/ச/ 6538 திருமதி. நாகேஸ்வரி காராளசிங்கம்
யா/ச/6540 திரு. கதிர்காமு இராமநாதி
யா/ச/6546 திருமதி. தவபாக்கியம் நாகராசா
யா/ச/ 6557 திரு. பொன்னுத்துரை தவச்செல்வம்
யா/ச/6587 திரு. நடேசன் சிங்காரவேலு
யா/ச/ 6612 திரு. ஆறுமுகம் கந்தசாமி
யா/ச/6716 திரு. முருகேசு நடராஜா
யா/ச/ 6744 திரு. சிற்றம்பலம் ஆறுமுகம்
யா/ச/ 6769 திருமதி. மகேஸ்வரி வேலுப்பிள்ளை
யா/ச/ 6814\ திரு. முருகுப்பிள்ளை சச்சிதானந் தம்பிள்ளை
யா/ச/ 6857 திரு. பொன்னம்பலம் ஜெகநாதன்
யா/ச/6920 திரு. மாணிக்கம் சீராளன்
யா/ச/ 6932 திரு. இளையதம்பி கனகசபாபதி
யா/ச/ 6940 செல்வி. மகேஸ்வரி நாகலிங்கம்
யா/ச/ 6944 திருமதி. சுபத்திராதேவி தம்பிராசா
யா/ச/ 7030 திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன்
யா/ச/7042 திருமதி. பாக்கியம் தம்பிப்பிள்ளை
யா/ச/ 7045 திரு. செல்லத்துரை விநாயகமூர்த்தி
யா/ச/7076 திரு. துரையப்பா மாரிமுத்து
யா/ச/ 7082 திரு. முருகேசு கதிர்காமத்தம்பி
யா/ச/ 7084 திரு. துரையப்பா திருநாவுக்கரசு
யா/ச/ 7100 திருமதி. யோகேஸ்வரி நல்லதம்பி

## காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு

யா/கா/ 38 திரு. ஆறுமுகம் தர்மலிங்கம்
யா/கா/44 திருமதி. புவனேஸ்வரி சிவசுப்பிரமணியம்
யா/கா/ 73 திருமதி. புவனேஸ்வரி சிவப்பிரகாசம்
யா/கா/96 செல்வி. தேவகி கந்தையா
யா/கா/135 திருமதி. விஜயலட்சுமி சோமசுந்தரம்
யா/கா/ 136 திரு. குமாரவேலு தர்மலிங்கம்
யா/கா/144 திரு. சுப்பிரமணியம் துரைராசா
யா/கா/240 திரு. கைலாசபிள்ளை பாலசுப்பிரமணியம்
யா/கா/ 257 திரு. நடராசா சண்முகநாதன்
யா/கா/ 271 திரு. அருணாசலம் சோமசுந்தரம்
யா/கா/295 திரு. சூரியன் வேலுப்பிள்ளை
யா/கா/ 306 திரு. தோமா டானியல்
யா/கா/ 325 திரு. விசுவலிங்கம் குலரத்தினம்
யா/கா/ 330 திருமதி. காமாட்சி நாகராசா
யா/கா/ 337 திருமதி. அன்னபூரணம் சுந்தரமூர்த்தி
யா/கா/353 திரு. சிற்றம்பலம் பாலசிங்கம்
யா/கா/ 391 திருமதி. இராசம்மா மார்க்கண்டு
யா/கா/ 407 திருமதி. மகேஸ்வரி பொன்னம்பலம்
யா/கா/427 திரு. தில்லையம்பலம் செல்வராசா
யா/கா/441 திரு. தில்லையம்பலம் சிவலிங்கராசா
யா/கா/ 469 திருமதி. சிவனேஸ்வரி மகானந்தன்
யா/கா/ 474 திரு. மணியம் கிருஷ்ணர்
யா/கா/ 479 திரு. சுப்பிரமணியம் நடராசா
யா/கா/ 489 திருமதி. நாகேஸ்வரி கந்தையா
யா/கா/493 திரு. சுப்பிரமணியம் ஆண்டிஐயா
யா/கா/ 529 திரு. சபாபதிப்பிள்ளை சதாசிவம்
யா/கா/ 537 திரு. திருவாதர் கந்தசாமி
யா/கா/\ 551 திரு. ஆறுமுகம் கந்தசாமி
யா/கா/552 திரு. கிருஷ்ணர் சிவமணி
யா/கா/ 576 திரு. நமசிவாயம் திருநாவுக்கரசு
யா/கா/577 திருமதி. பரமேஸ்வரி கணேசன்
யா/கா/581 திருமதி. இராசலோகினி தம்பிஐயா
யா/கா/605 திருமதி. இராஜேஸ்வரி சுப்பிரமணியம்
யா/கா/613 திருமதி. பாக்கியம் இராமநாதன்
யா/கா/ 615 திருமதி. நாகேஸ்வரி குமாரவேலு
யா/கா/629 திருமதி. சிவயோகமலர் சீனியர்
யா/கா/647 திரு. வினாசித்தம்பி ஆறுமுகம் இராமநாதன்
யா/கா/ 652 திரு. மூத்ததம்பி இந்திரசித்து
யா/கா/ 658 திரு. தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
யா/கா/ 662 திருமதி. இராஜேஸ்வரி சச்சிதானந்தன்
யா/கா/707 திரு. விசுவலிங்கம் கனகரத்தினம்
யா/கா/777 திரு. தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரன்
யா/கா/ 783 திரு. செல்லையா இராமுப்பிள்ளை
யா/கா/ 787 திரு. ஆறுமுகம் பாலசிங்கம்
யா/கா/796 திருமதி. கமலம் சண்முகம்
யா/கா/ 838 திருமதி. பாக்கியம் சீவரட்ணம்
யா/கா/ 850 செல்வி. யோகாம்பிகை முத்து சுவாமிக்குருக்கள்
யா/கா/876 திரு. ஆறுமுகம் இரத்தினம்
யா/கா/877 திருமதி. பாக்கியம் கந்தையா
யா/கா/ 885 திரு. அரியகுட்டி ஐயாத்துரை
யா/கா/ 920 திரு. செல்லையா திருநாவுக்கரசு
யா/கா/927 திருமதி. சரஸ்வதியம்மா யோகராசா
யா/கா/ 929 திருமதி. தெய்வானைப்பிள்ளை கணேசப்பிள்ளை
யா/கா/ 934 திரு. சண்முகம் திருநாவுக்கரசு
யா/கா/ 946 திருமதி. பரமேஸ்வரி வேலுப்பிள்ளை
யா/கா/ 959 திருமதி. கனகசுந்தரம் வெற்றிவேலு
யா/கா/ 965 திரு. அப்புக்குட்டி சிவப்பிரகாசம்
யா/கா/ 981 திரு. செல்லத்துரை பரம்சோதி
யா/கா/1027 திரு. கந்தையா சுந்தரலிங்கம்
யா/கா/ 1031 திரு. சிவகுரு சுப்பிரமணியம்
யா/கா/1035 திருமதி. சிவக்கொழுந்து தர்மலிங்கம்
யா/கா/1051 திருமதி. வள்ளியம்மை ஒப்பிலாமணி
யா/கா/1111 திருமதி. லீலாவதி முருகேசு
யா/கா/1115 திரு. அம்பலம் கதிரமலை
யா/கா/ 1142 திரு. முருகுப்பிள்ளை இராசதுரை
யா/கா/ 1149 திரு. கோவிந்தப்பிள்ளை பரமசிவம்
யா/கா/1167 திரு. கந்தர் பரமசாமி
யா/கா/ 1192 திருமதி. தெய்வானை மார்கண்டு
யா/கா/ 1194 திரு. சபாபதி பத்மநாதன்
யா/கா/ 1228 திருமதி. பூமணி சகாதேவன்
யா/கா/ 1244 திரு. மார்க்கண்டு பாலசுப்பிரமணியம்
யா/கா/ 1290 திருமதி. ஆச்சிமுத்து வேலுப்பிள்ளை
யா/கா/ 1312 திருமதி. தங்கமுத்து துரைராசா
யா/கா/ 1314 திருமதி. தையல்நாயகி பாலசிங்கம்

## தெல்லிப்பழை உதவிஅரசஅதிபர் பிரிவு

யா/தெ/79 திரு. பொன்னையா தர்மராசசிங்கம்
யா/தெ/99 திரு. இராசகோபால் இராமச்சந்திரன்
யா/தெ/136 திரு. வேலாயுதர் கந்தையா
யா/தெ/138 திருமதி. மேரியோசேப்பின் பரிமளம் இம்மனுவேல்யோசேப்
யா/தெ/163 திருமதி. அன்னலட்சுமி வேலுப்பிள்ளை
யா/தெ/179 திரு. அப்புக்குட்டி கந்தையா
யா/தெ/204 திரு. கனகர்சரவணமுத்து சிவகுரு
யா/தெ/215 திருமதி. செல்லம்மா இராஜரத்தினம்
யா/தெ/225 திருமதி. மகேஸ்வரி தியாகராசா
யா/தெ/251 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/தெ/326 திரு. விசுவநாதர் கந்தையா ,
யா/தெ/332 திருமதி. பத்மாவதி பாலசுப்பிரமணியம்
யா/தெ/346 திருமதி. புவனேஸ்வரி சுப்பையா
யா/தெ/438 திரு. அப்பச்சி இராசரத்தினம்
யா/தெ/452 திருமதி. மீனாட்சி வைத்திலிங்கம்
யா/தெ/455 திரு. கந்தையா கணேஸ்
யா/தெ/462 திரு. கணபதிப்பிள்ளை விஜயரெட்ணம்
யா/தெ/479 செல்வி. மனோன்மணி சின்னத்தம்பி
யா/தெ/511 திருமதி. அழகம்மா சிவப்பிரகாசம்
யா/தெ/515 திருமதி. அன்னம்மா அருணாசலம்
யா/தெ/553 திருமதி. திருவருட்செல்வி மயில்வாகனம்
யா/தெ/561 திரு. முத்தையா பத்மநாதன்
யா/தெ/580 திருமதி. சிவநேசம் செல்வநாயகம்
யா/தெ/646 திரு. மாரிமுத்து கந்தையா
யா/தெ/657 திருமதி. அன்னம் செல்லத்துரை
யா/தெ/661 திரு. சின்னட்டி செல்லையா
யா/தெ/695 திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
யா/தெ/708 திருமதி. பர்வததேவி ஞானசேகரம்
யா/தெ/760 திரு. கந்தையா உமாபதி
யா/தெ/798 திருமதி. இராஜேஸ்வரி ஸ்ரொனெக்
யா/தெ/802 திருமதி. சிவம்மா கைலாயபிள்ளை
யா/தெ/ 813 திரு. முத்தையா அருளையா
யா/தெ/826 திரு. பொன்னர் தம்பிராசா
யா/தெ/846 திரு. சின்னத்துரை வேலாயுதபிள்ளை
யா/தெ/880 திரு. சின்னவி பொன்னம்பலம்
யா/தெ/891 திரு. இராமலிங்கம் பாலசுப்பிரமணியம்
யா/தெ/902 திருமதி. தங்கேஸ்வரி சின்னத்தம்பி
யா/தெ/903 திரு. தண்டிகை பூதத்தம்பி முருகையா
யா/தெ/ 919 திரு. இலங்கைநாயகம் நடேசன்
யா/தெ/954 திரு. நாகரட்ணம் சுந்தரலிங்கம்
யா/தெ/996 திருமதி. லிங்கேஸ்வரி இராசநாயகம்
யா/தெ/1006 திருமதி. பரமேஸ்வரி பரமானந்தன்
யா/தெ/1031 திருமதி. மகேஸ்வரி பத்மநாதன்
யா/தெ/1064 திரு. வேலுப்பிள்ளை மயில்வாகனம்
யா/தெ/1066 திரு. செல்லர் பரமு
யா/தெ/1094 திரு. கந்தையா சின்னத்துரை
யா/தெ/1121 திரு. சின்னத்தம்பி தில்லைநாதன்
யா/தெ/1140 திரு. செல்லப்பா துரைரத்தினம்
யா/தெ/ 1141 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
யா/தெ/1149 திரு. கதிர்காமு இராசா
யா/தெ/ 1160 திரு. சிவகுரு சீவரத்தினம்
யா/தெ/1165 திருமதி. நல்லம்மா பொன்னுத்துரை
யா/தெ/1186 திரு. தம்பிஅப்பா பூபாலப்பிள்ளை
யா/தெ/1197 திரு. செல்லையா பத்மகாந்தன்
யா/தெ/1213 திருமதி. நேசமணி கனகசபாபதி
யா/தெ/1262 திரு. மயில்வாகனம் பகீரதன்
யா/தெ/1274 திரு. திருவம்பலம் சிவசுப்பிரமணியம்
யா/தெ/1278 திரு. தாமோதரம்பிள்ளை பாலசிங்கம்
யா/தெ/1296 திருமதி. துவாரகாதேவி பரமேஸ்வரன்
யா/தெ/1336 திரு. இலகுப்பிள்ளை சங்கரப்பிள்ளை
யா/தெ/1366 திரு. அருளானந்தம் மோகனதாஸ்
யா/தெ/ 1406 திரு. கந்தையா இராசநாயகம்
யா/தெ/1409 திரு. சின்னத்தம்பி கந்தப்பிள்ளை
யா/தெ/1414 திரு. முருகேசு சுப்பிரமணியம்
யா/தெ/1435 திரு. கதிரமலை சபாநேசன்
யா/தெ/1488 திருமதி. வேதநாயகியம்மா இராசநாயகம்
யா/தெ/1495 திருமதி. மரகதவல்லி சர்வானந்தராசா
யா/தெ/1520 திரு. இராமு வயிரமுத்து
யா/தெ/1542 திருமதி. இராசம்மா ஐயாத்துரை
யா/தெ/1577 திருமதி. வள்ளியம்மை இராமலிங்கம்
யா/தெ/1619 திருமதி. ஞானம்மா அந்தோனிப் பிள்ளை
யா/தெ/1629 திரு. அய்யாத்துரை பரமநாதன்
யா/தெ/1641 திருமதி. அன்னமுத்து யோகவனம்
யா/தெ/1645 திரு. சிவகுரு பாலசிங்கம்
யா/தெ/1650 திருமதி. மகேஸ்வரி நாகேந்திரம்
யா/தெ/1655 திரு. வயிரமுத்து கனகசபாபதி
யா/தெ/1682 திரு. சரவணமுத்து சுப்பிரமணியசுவாமி
யா/தெ/1694 திரு. பொன்னம்பலம் தெய்வேந்திரன்
யா/தெ/1769 திரு. துரைசிங்கம் தனபாலசிங்கம்
யா/தெ/1773 திருமதி. மகேஸ்வரி பாலகிருஷ்ணர்
யா/தெ/ 1787 திரு. சரவணை சுப்பிரமணியம்
யா/தெ/ 1807 திரு. பொன்னுத்துரை பத்மநாதன்
யா/தெ/ 1855 திரு. கணபதிப்பிள்ளை துரைரத்தினம்
யா/தெ/ 1919 திரு. கந்தையா இராசநாயகம்
யா/தெ/ 1924 திருமதி. இராசம்மா கந்தையா
யா/தெ/1963 திரு. அப்பாத்துரைஐயர் துரைச்சாமிஐயர்
யா/தெ/ 1978 திருமதி. ஆனந்தம் இன்னாச்சிமுத்து
யா/தெ/ 1987 திரு. சுப்பிரமணியம் தர்மராசா

(தொடரும்...)

# கொத்தணி வாக்குச்சாவடிக்கு விசேட அதிகாரி நியமனம்

வடக்கு கிழக்கு மாகாணத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் மக்கள் வாக்களிக்க அமைக்கப்படும் கொத்தணி வாக்குச் சாவடி தொடர்பில் விசேட அதிகாரி ஒருவரை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளருக்கும், சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மூன்றாவது முறையாக இந்தப் பிரதிநிதிகளை சந்தித்த தேர்தல் ஆணையாளர், வாக்கு மோசடிகளை தடுப்பதற்காக முக்கிய அதிகாரி ஒருவரை நியமிப்பதாக தெரிவித்தார்.

கொத்தணி வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க வருபவர்களை அடையாளம் காண பிரதேசங்களின் கிராம சேவகர்களின் சேவையும் பெற்றுக்கொள்ள உள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களின் பிரச்சார துண்டுப் பிரசுரங்கள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படும் பொழுது, பொலிசாரினால் ஏற்பட்டுள்ள குந்தகம் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்தப் பிரச்சினை குறித்து பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்தா திசாநாயக்க தெரிவித்துள்ளார். (32)


## கச்சேரி முல்லைத்தீவு

## கேள்வி அறிவித்தல்

01) *முல்லைத்தீவு கச்சேரி வளாகத்துள் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான கேள்வி தகுதி வாய்ந்த கட்டட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கேள்வி கோரும் ஒப்பந்தக்காரர் குறைந்தது ICTAD தரம் M7 இல் பதிவு செய்யப்பட்டவராக அல்லது உயர்தரத்தில் இருத்தல் வேண்டும் மீளளிக்கப்பட்டாத வைப்புப் பணமாக ரூபா 1500/= ஐ செலுத்தி கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவு கச்சேரியில் 2005.11.10 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கிடையில் பெற்றுக் கொள்ளலாம்.*

02) *பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2005.11.18ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் அரசாங்க அதிபர், கச்சேரி முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ இடலாம். கேள்விப்பத்திரத்தை உள்ளடக்கிய உறையின் இடது பக்க மேல்மூலையில் "முல்லைத்தீவு கச்சேரி வளாகத்தினுள் கட்டடமமைத்தல்" எனக் குறிப்பிடல் வேண்டும்.*

03) *கேள்விகள் 2005.11.18 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும் அந்நேரத்தில் கேள்வி கோரியோர் அல்லது அவரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம். தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் நான்கு நாட்களுக்குள் அதாவது 2005.11.24 ஆம் திகதிக்கு முன் முழு கேள்வித் தொகையில் 2% மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமாக செலுத்தி வேலை ஒப்பந்தத்தில் கையொப்பம் இடல் வேண்டும்.*

05) மேலதிக விபரங்கள் தேவைப்படின் பிரதம கணக்காளர் கச்சேரி, முல்லைத்தீவு அவர்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

(இமெல்டா சுகுமார்)
கேள்விச்சபைத்தலைவரும்,
அரசாங்க அதிபரும்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி 13175)

## தமிழீழ தேசியதொலைக்காட்சி
## பணிநிலை வேண்டுகை

*உலகெங்கும் தன் ஒளிபரப்பு வீச்செல்லையை விரித்துள்ள தமிழீழ தேசிய தொலைக்காட்சியில் கண்ணியமான காட்சிப்படுத்தலுடன் கூடிய விளம்பரங்களில் நடிப்பதற்கான ஆண்கள், பெண்கள் உடன் வேண்டப்படுகின்றனர்.*

### பணிக்கான ஆற்றல் நிலை

*18 – 30 வயதுக்கு உள்ளடங்கியோர்.

* தமிழை வழுவின்றியும் ஆற்றொழுக்காகவும் உச்சரிப்பதுடன் விளம்பரத்துக்கு ஏற்ற குரல் வளத்தையும் கொண்டிருத்தல்.

*முகக்குறிப்புகளுடன் கூடிய கொஞ்சம் நடிப்புத்திறன்.

* பலதரப்பட்ட விளம்பரங்களையும் வெளிப்படுத்தும் ஆளுமை.

*காட்சிகளில் தோன்றும் பணியென்பதால் பார்வையாளர்களின் கவன ஈர்ப்பை தம்பக்கம் எடுக்கும் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

*நடன ஆற்றல் மேலதிக ஆளுமையாகக் கொள்ளப்படும்.

*அண்மையில் எடுத்த முழுஅளவு நிழற்படத்துடன் நேரில் வருகை தரவும்.

தொடர்புகளுக்கு:-
தமிழீழ தேசிய தொலைக்காட்சி தொடர்பகம்,
யாழ்.முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.
T.P. 021 228 5816

(சி.13160)

## வீடுவாடகைக்கு உண்டு

*முல்லைத்தீவு கரைச்சி குடியிருப்பிலும் முள்ளியவளையிலும் வீடு வாடகைக்கு உண்டு மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.*

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

*ந.வன்னியராசா,*
*மாங்குளம் வீதி,*
*முள்ளியவளை.*

*(சி-13176)*

*ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி*
*(துறைசார் ஆலோசனை வழங்குனர், நிர்மாணதாரர்)*

## பணிநிலை வேண்டுகை

கீழ் குறிப்பிடப்படும் பணிநிலைகளிற்கு தகுதியானவர்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

பணிநிலை :-கட்டட தொழில்நுட்பவியல்,
1.படவரைஞர், மதிப்பீட்டாளர்,
2.மேற்பார்வையாளர், நிலஅளவையாளர்.
கல்வித்தகைமை :-க.பொ.த(சா/த)த்தில் தமிழ், கணிதம், உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 20தொடக்கம்35வரை


சம்பளம் :-நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

நேர்முகத்தேர்வு
நடைபெறும்
இடம் :- ஜெனரல்இன்ஜினியரிங் கொம்பனி 45A கனகபுரம், கிளிநொச்சி.
காலம் :- 31.10.2005 (திங்கட்கிழமை)
நேரம் :- காலை 10.00

மேற்குறித்த பணிநிலைகளிற்குத் தகுதியானவர்கள் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.
மேலாளர்,
ஆளணிப்பகுதி,
ஜெனரல் இன்ஜினியறிங் கொம்பனி.
(சி.13151)


## 7ஆம் ஆண்டு நீங்காத நினைவுடன்

*ஜனனம்* *17 - 11 - 1978*



*வீரச்சாவு* *30 - 10 - 1998*

### கடற்புலி கப்டன் இளங்கதிர்
### தனபாலசிங்கம் ஜெகதீஸ் (ஜேந்தா)

மானத்தமிழன் வீரம் சொல்ல
தானைத்தலைவன் சேனை புகுந்தவனே!
தாய்நாட்டின் துயர் துடைக்க
வேகம் கொண்டெழுந்தவனே ஜேந்தா!
நெஞ்சினில் விடுதலைத்தாகம் கொண்டு
இளங்கதிராக நீ நிமிர்ந்தாய்!
ஆழிக்கடல் மீதில் வேகப்படகேறி
எத்தனை களங்கள் நீ கண்டாய் -அன்றும்
வேகப்படகேறி தொலைத்தொடர்பாளனாய் களம்கண்டு வெற்றிச் செய்தியதை
மட்டும் கரையனுப்பிவிட்டு -நீ
விழிமூடிக் கரைசேர்ந்ததேனோ?
விழிமூடி வித்துடலாய் நீ வந்தாய் -அன்று
இமைமூடும் பொழுதெல்லாம் உன் நினைவோடுதவிக்கின்றோம் நாமிங்கு
ஆண்டுகள் ஏழென்ன ஏழேழு ஜென்மங்கள் ஆனாலும்
மலர்கின்ற மலராக எம்மோடு நீ வாழ்வாய்.

இவருடன் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட கப்டன் மேனனையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்,
இளஞ்சோலை அழகுமாடம்,
முல்லைவீதி,
புதுக்குடியிருப்பு.

நி.முகவரி:-
வேம்படி,
வடமராட்சி கிழக்கு. (6891)

# ஷெல்காஸ் விற்பனையாளர்களுக்கும் ஷெல் காஸ் பாவனையாளர்களுக்கும் எமது அன்பான தீபாவளி நல்வாழ்த்துக்கள்!




## ஷெல் காஸ் கம்பனியும் வடபகுதி விநியோகஸ்தரும் அறியத்தருவது

***வடபகுதியில் தீர்மானிக்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளதுமான அதிகூடிய சில்லறை விலை.***

| | |
|---|---|
| 37.5கி.கி எடையுடைய சமையல் எரிவாயு (காஸ்) | 3810/= |
| 12.5 கி.கி எடையுடைய சமையல் எரிவாயு | 1050/= |
| 02.5 கி.கி எடையுடைய சமையல் எரிவாயு | 260/= |

| *வெற்று சிலிண்டர்களின் விலை* | *சில்லறை விலை* |
|---|---|
| 37.5 கி.கி சிலிண்டர்களின் விலை | 5000/= |
| 12.5 கி.கி சிலிண்டர்களின் விலை | 2650/= |
| 02.4 கி.கி சிலிண்டர்களின் விலை | 1250/= |
| 12.5 kg சிலிண்டர், காஸ், ரினாய் (Rinai) இரட்டை அடுப்புக்களைக்கொண்ட குக்கர் றெகுலெற்றர் செற் | 9750/= |

புதிதாக ஷெல் காஸ் பெற விரும்புபவர்கள் சிலிண்டர்காஸ், றெகுலேற்றர், குக்கர், சகிதம் அருகே உள்ள விற்பனையாளரிடம் அல்லது முகவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்கனவே சிலிண்டர்கள் வைத்து இருப்பவர்கள் மேலதிகமாகத் தேவைப்படும் இடத்து 02.4 கி.கி சிலிண்டரை தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

02.4கி.கிசிலிண்டரை வேண்டுவதினால் மேலதிக பணமுடக்கத்தைத் தவிர்ப்பதுடன், கொண்டுசெல்வதில் உள்ள சிரமத்தையும் அவசரமான சமையல் நேரத்தில் காஸ் தீர்ந்து போவதால் ஏற்படக்கூடிய சிரமத்தையும் தவிர்க்கலாம்.

ஏற்கனவே குக்கர் இருந்து சிலிண்டர் இல்லாத காரணத்தால் பாவிக்கமுடியாமல் இருப்பவர்கள் விநியோகத்தர்களிடமும் விற்பனையாளர்களிடமும் மேலதிக கையிருப்பு இல்லாத காரணத்தினால் சிரமத்தை பாராது ஷெல்காஸ் கம்பனியின் வாடிக்கையாளர்சேவை தொ.பேசி இலக்கத்தை பயன்படுத்தி 0112/505808 வாடிக்கையாளர் சேவையுடன் தொடர்புகொண்டு தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யவும்.

ஷெல்காஸ் கம்பனி கோரும் பட்சத்தில் தங்கள் தே.அ.அ.இல சரியான முகவரி, பெறவிரும்பும் அருகே உள்ள விற்பனையாளரின் விபரம் என்பவற்றை வழங்கவும்.

தேவைப்படின் மேற்குறிக்கப்பட்ட இலக்கத்துக்கே விபரங்களை (Fax) தொலைநகல் மூலமும் அனுப்பலாம்.

வாடிக்கையாளர்கள் சேவை 24 மணிநேரமும் இயங்கும் ஓர் சேவையாகும். தமிழ்மொழி மூலம் தொடர்புகொள்பவர்கள் அலுவலக நேரத்தை காலை (8-12-பி.ப1-5) கடைப்பிடிக்கவும்.

காஸ் கொள்வனவு செய்யும்போது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடம் மட்டும் கொள்வனவு செய்யவும்.

ஏதாவது முறைப்பாடுகளுக்கு
தொ.இல. 222 2100
222 2055
உடன் தொடர்புகொள்ளவும்

## அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் விபரம்

01.சிற்றி ஏஜன்சி, ஸ்ரான்லி றோட்.
02.ஹரிணி ஹாட்வெயார், ஸ்ரான்லி றோட்.
03.T.R.G , ஸ்ரான்லி றோட்.
04.ரதன் மல்டிரேடர்ஸ், மானிப்பாய் வீதி.
05.மெக்ஸ்மொபின், மின்சாரநிலையவீதி.
06.S.V.M ஆஸ்பத்திரிவீதி.
07.ரட்ணா, பாங்சால்வீதி, சின்னக்கடை.
08.தவசீலன், ஈச்சமோட்டை.
09.திருநீலகண்டன், பாண்டியன்தாழ்வு.
10.ஆறுமுகம் H.W மாம்பழம் சந்தி.
11.நடனமுருகன்,ப.துறைவீதி,நல்லூர்.
12.சாருகேசன்கொம், கோயில்வீதி கைலாசபிள்ளையார் கோயிலடி நல்லூர்.
13.பிருந்தா,றக்கா வீதி.
14.பிரகாஷ் ஏஜன்சி,கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம்.
15.காந்தன் களஞ்சியம்,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
16.துளசி ஸ்ரோர்ஸ், தட்டாதெருச்சந்தி.
17.லிங்கம் ஸ்ரோர்ஸ், நாச்சிமார் கோயிலடி.
18.லக்சுமி ஸ்ரோர்ஸ், கொக்குவில்.
19.நியூ சுபாஸ், கொக்குவில்
20.சுதா கொமினிகேசன், கொக்குவில்.
21.லிங்கம் ஸ்ரோர்ஸ் (குணம்), மானிப்பாய்வீதி, தாவடி
22.சிவன் ஸ்ரோர்ஸ், உப்புமடம் சந்தி, கோண்டாவில்.
23.விதுஷா சுப்பர் மார்க்கட், இணுவில் சந்தி.
24.புகழ் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்.
25.சிறீகணேசாரோர்ஸ், சுன்னாகம்.
26.ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பழை.
27.சந்திரா ஸ்ரோர்ஸ், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.
28.கமலா ஸ்ரோர்ஸ், நவாலிவீதி, ஆனைக்கோட்டை.
29.தினேஸ் பேக்கரி, யாழ்வீதி, மானிப்பாய்.
30. அம்பாள் ஸ்ரோர்ஸ், அற்கின்சன்வீதி, வட்டுக்கோட்டை.
31.சிறீ.முருகன் ஸ்ரோர்ஸ், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
32.நிறஞ்சனாஸ் ஹாட்வெயார், பொன்னாலைவீதி, சங்கானை.
33.கே.கே.எஸ்.ரேடர்ஸ், மல்லாகம்-சங்கானைவீதி, அளவெட்டி.
34.நாதன் தொ.தொடர்பகம், மல்லாகம், (சங்கானைவீதி).
35.துர்க்கா ஸ்ரோர்ஸ், புன்னாலைக்கட்டுவன், மல்லாகம்வீதி, ஏழாலை.
36.நாதன் ஹாட்வெயார் (கஜமுகன்), புன்னாலைக்கட்டுவன் சந்தி.
37.மங்கை ஸ்ரோர்ஸ், கரந்தன் வீதி, நீர்வேலி.
38. சர்மிளா ஸ்ரோர்ஸ், (சிவகுமார்), உருபிராய்சந்தி.
39.சுதர்சன் ஸ்ரோர்ஸ், (வ-து), ஒஸ்காலேன், உரும்பிராய்.
40.கணபதி களஞ்சியம், பலாலிவீதி, கோண்டாவில்.
41. சர்மிளா கொம், பலாலிவீதி, கந்தர்மடம்.
42சிவன் ஸ்ரோர்ஸ், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.
43.சிவா பிறதேர்ஸ், திருநெல்வேலிச்சந்தி, திருநெல்வேலி.
44.சூரியா ஹாட்வெயார், கலாசாலைவீதி, திருநெல்வேலி.
45.டனுஷா ஹாட்வெயார், ஜி.பி.எஸ்.வீதி, கல்வியங்காடு.
46.ஏகாம்பரம் ஸ்ரோர்ஸ், ப.துறை வீதி, கல்வியங்காடு.
47.ஏ.எம்.ரீ.ராண்ஸ்போட், ப.துறைவீதி, இருபாலைச்சந்தி.
48.ஈஸ்.மாரியம்மன் மோட்டோர்ஸ், ப.துறைவீதி, கோப்பாய்.
49.விக்கி ஸ்ரோர்ஸ், கோயில்வீதி, முடமாவடி, நல்லூர்.
50.அம்பாள் ஸ்ரோர்ஸ், அம்மன்கோயிலடி, கலட்டி,யாழ்.
51.கேசன் கொம், சீனியர் லேன், கலட்டி,யாழ்.
52.கீர்த்திகா கொம், பிறவுண் றோட், நீராவியடி.
53.சபாறதனி மோட்டோர்ஸ், ப.துறைவீதி, அச்சுவேலி.
54.சித்திவிநாயகர் ஸ்ரோர்ஸ், பிள்ளையார் கோயிலடி, தொண்டமானாறு.
55.மதுஷன் ஹாட்வெயார், யாழ்.வீதி, உடுப்பிட்டி.
56.கோபி கிருஷ்ணா ஸ்ரோர்ஸ், வல்வெட்டித்துறைவீதி, உடுப்பிட்டி.
57.தவராஜா ஸ்ரோர்ஸ், வல்வெட்டித்துறைவீதி, வல்வெட்டித்துறை.
58.ஜமகாபிளாஸா, நெடியகாடு, வல்வெட்டித்துறை.
59.ஓம் சரவணபவன் கொம், வதிரி-பொலிகண்டிறோட், கொற்றாவத்தை.(V.V.T)
60.நெல்லைக்குமரன்ஸ், ப.துறை வீதி, நெல்லியடி.
61.முருகன் ஹாட்வெயார், ப.துறைவீதி, நெல்லியடி.
62.அம்பிகா, ப.துறைவீதி,மந்திகை.
63.ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பஸ்நிலையம்,ப.துறை.
64.மயூரா கொம், அல்லையம்பதி,துன்னாலை.
65.தேவன் ஸ்ரோர்ஸ், கலிகைச் சந்தி, கரவெட்டி.
66.இளந்தென்றல் சமையல் எரிவாயு விற்பனை நிலையம், கிளிநொச்சி
67.மணியம் ஸ்ரோர்ஸ், கண்டிவீதி, கொடிகாமம்.
68.சண்முகா ஸ்ரோர்ஸ், கண்டிவீதி, சாவகச்சேரி.

(சி.13134)

**ச.வி.முருகேசு,**
**வடபகுதி ஷெல் காஸ் ஏக விநியோகஸ்தர்,**
**இல:154, ஆஸ்பத்திரிவீதி,**
**யாழ்ப்பாணம்.**

**T.P:021 222 2100**
**021 222 2055**

## விசுவமடு வர்த்தக சங்க கிரிக்கெட் போட்டி

# பரபரப்புமிக்க இறுதியாட்டத்தில் தோழர்கள் அணி கிண்ணத்தை சுவீகரித்தது



தோழர்கள் அணி அபாரமான பந்து வீச்சின் மூலம் விசுவமடு வர்த்தக சங்கத்தின் வெற்றிக் கிண்ணத்தை மிகவும் பரபரப்புக்கு மத்தியில் சுவீகரித்துக்கொண்டது.

விசுவமடு வர்த்தக சங்கத்தினால் நடாத்தப் பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் இளந்தாரகை அணியை எதிர்த்து ஆடிய தோழர்கள் அணி ஐந்து ஓட்டங்களினால் வெற்றிபெற்று மேற்படி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

விசுவமடு மகாவித்தியாலய மைதானத் தில் நடைபெற்ற இவ் இறுதிப் போட்டி இருபது ஓவர்களைக் கொண்டதாக இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இளந்தாரகை அணித் தலைவர் யோகீசன் முதலில் களத்தடுப்புச் செய்யத் தீமானித்தார்.

இதற்கமைய முதலில் களமிறங்கிய தோழர்கள் அணி இளந்தாரகை அணியின் அபாரமான பந்து வீச்சின் மூலம் அதன் நம் பிக்கை துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்டை இழந்தவண்ணமிருந்தது. இருந்தபோதும் உதயனும், தினேசும் அணியின் ஓட்ட எண் ணிக்கை கௌரவமான நிலைக்குக் கொண்டு சென்றனர். இறுதியில் 18.4 ஓவர்கள் நிறை வில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. துடுப் பாட்டத்தில் உதயன் 13 ஓட்டங்களையும், தினேஷ் பத்து ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மிகவும் சிறப்பாக பந்து வீசிய கீர்த்திபன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப் பற்றினார்.

பதிலுக்கு 64 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இளந் தாரகை அணி 11 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சாரங்கனின் விக்கெட்டை இழந்த போதும் பிரகாஸின் அதிரடித் துடுப்பாட்டம் இளந்தாரகை அணிக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் அமைந்தது. அத்துடன் கஜேந் திரனால் வீசப்பட்ட ஐந்தாவது ஓவரில் மூன்று ஆறு ஓட்டம் அடங்கலாக 23 ஓட்டங்களைப் பெற்ற இளந்தாரகை அணி போட்டியின் போக்கை தம் ஆதிக்கத்திற்குள் வைத்திருந்த னர்.

ஆனால், உதயன், தர்மேந்திரா ஆகி யோரின் அபாரமான பந்து வீச்சு போட்டியின் போக்கை திசைதிரும்பும் வகையில் அமைந்த துடன் தோழர்கள் அணியின் வெற்றியையும் உறுதி செய்தது. இறுதியில் இளந்தாரகை அணி 13. 1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங் களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பிரகாஸ் மூன்று ஆறு ஓட்டம் அடங்கலாக 24 ஓட்டங் களையும் சாரங்கன் ஒன்பது ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தர்மேந்திரா நான்கு விக்கெட்டுக்களையும், உதயன் மூன்று விக்கெட்டுக்களையும், தினேஷ் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டித் தொடரின் தொடர் நாயகனாக இளந்தாரகை அணியின் தலைவர் யோகீச னும், போட்டியின் ஆட்டநாயகனாக உதய னும் தெரிவாகினர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக சுபானந், ஆனந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

இதனையடுத்து ஞானம் தலைமையில் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. பரிசில்களை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சிவமணியும், பாண்டியன் வாணிபத்தைச் சேர்ந்த வில்வமும் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு உதைபந்தாட்டம்

# ஸ்கந்தா வி.க., உழவர்ஒன்றியம் வி.க இரண்டாம் சுற்றிற்கான போட்டிகளில் வெற்றி!



(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான கிளி. மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபையினரால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாம் சுற்றுக்கான நேற்றைய் போட்டிகளில் ஸ்கந்தா விளையாட்டுக்கழகமும், உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான இரண்டாவது சுற்றின் நேற்றைய முதலாவது போட்டியில் ஸ்கந்தா விளை யாட்டுக்கழகமும், உருத்திரபுரம் விளையாட்டுக்கழகமும் மோதின.

போட்டி ஆரம்பமாகி சுமார் 26ஆவது நிமிடத்தின் பின்னர் ஸ்கந்தா விளையாட்டுக்கழக வீரர் கோலைப் போட்டார். இந்நிலையில் போட்டி மிகவும் பரபரப்பாக நடைபெற்றபோதும் இறுதியில் ஸ்கந்தா அணி 1-0 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் அணியை வீழ்த்தியது.

தொடர்ந்து இரண்டாவது போட்டியில் உழவர் ஒன்றியம், லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்துடன் மோதியது. இரு அணிகளுக்கிடையிலான போட்டி ஆரம்பமாகி ஏழு நிமிடத்தில் உழவர் ஒன்றிய அணியின் வீரர் கலாதரன் கோல் ஒன்றைப் போட்டார். இதன் பின்னர் இரு அணிகளுமே போட்டியைப் பரபரப்படையும் வண்ணம் விளையாடினர். இறுதியில் உழவர் ஒன்றியம் அணி 1-0 என்ற அடிப்படையில் லக்கிஸ்ரார் அணியை வீழ்த்தியது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்டுவரும் இந்தப் போட்டி இன்றும் நடைபெறும் என மேற்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (லோ, கு)

# டெண்டுல்கர் திரும்பியது கிரிக்கெட் ஆட்டத்திற்கு நல்லது


## இங்கிலாந்து அணிவீரர் பிளிண்டொப்



டெண்டுல்கர் காயத்தலிருந்து மீண்டும் களம் திரும்பி இருப்பது கிரிக்கெட் ஆட்டத்திற்கு நல்லது என்று இங்கிலாந்து சகலதுறை வீரர் பிளிண்டொப் கருத்துத்தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் போட்டித் தொடரில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக விளங்கிய பிளிண்டொப்புக்கு ஆசிய சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.விருது பெற்ற பிளிண்டொப் அளித்த ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது:- இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று டெஸ்ட் கொண்ட போட்டித்தொடரில் விளையாட வுள்ளது. அப்போது நான் டெண்டுல்கரை சந்திக்க ஆவலுடன் இருக்கின்றேன். டெண்டுல்கர் உலகின் சிறந்த கிரிக்கெட் வீரர் ஆவார். அவர் மீண்டும் களம் திரும்பி இருப்பது கிரிக்கெட் ஆட்டத்திற்கு நல்லது என்றும் அவர் மேலும் கூறினார்.




# இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் நியூசிலாந்து தெ.ஆபிரிக்காவிடம் தோல்வி



நியூசிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் கேப்ரவுனில் நடைபெற்ற இரண்டாவது சர்வ தேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி யில் தென்னாபிரிக்கா 19 ஓட்டங் களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப் பெடுத்தாடி ஒன்பது விக்கெட்டுக் கள் இழப்புக்கு 201 ஓட்டங் களைப் பெற்றது அவ்வணியின் ஜெக்கலிஸ் 51ஓட்டங்களையும் பவுச்சர் 40ஓட்டங்களையும் அணித்தலைவர் ஸ்மித் 36, கிப்ஸ் 33 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப்பெற்றனர். பொலக், என்ரினி .இருவரும் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.


பந்து வீச்சில் நியூசிலாந்து வீரர் கைல் மில்ஸ் நான்கு விக்கெட்டுக்களையும் ஸ்டைரிஸ், பொண்ட் தலா இரண்டு விக்கெட்டுகளையும் விட்டோரி ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

அடுத்து 202 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய நியூசிலாந்து அணி, லோவின்சன் 90 ஓட்டங்களைக்குவித்த போதும் ஏனைய வீரர்கள் தென்னாபிரிக்க பந்து வீச்சை சமாளிக்க முடியாது சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 47.5 ஓவரில் மொத்தம் 182 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அவ்வணியின் ஸ்டைரிஸ், பிராங்ளின் ஓரம் ஆகியோர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர். விட்டோரி ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க வீரர்கள் என்ரினி, லோங் வெல்ட் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் அன்ரூ நெல், கெம் ஒவ்வொரு விக்கெட்டையும் போஜே இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்கா இரண்டுக்கு பூச்சியம் என்ற நிலையில் உள்ளது.

# கங்குலிக்கு இடமில்லை



தற்போது நடைபெற்றுவரும் இந்திய இலங்கை ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொட ரில் எதிர்வரும் மூன்று போட்டிகளிலும் விளை யாடும் அணி வீரர்களில் எந்தவித மாற்றங் களையும் செய்யப்போவதில்லையென இந்தி யக் கிரிக்கெட் தெரிவுக்குழுவின் அணித் தலை வர் கிரன்மொரே தெரிவித்துள்ளார்.தற்போதைய அணி தொடர்பாக தாம் திருப்தி அடைவ தாகவும் இந்தப்போட்டித்தொடரை இவர்கள் கைப்பற்றுமிடத்தில் எதிர்வரும் காலங்களில் அணியில் மாற்றம் ஏற்படாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி போட்டி களில் விளையாடக் கூடிய திட நிலையில் இருந்த போதிலும் தற்போதைய நிலையில் அவர் அணியில் சேர்க்கப்படமாட்டார் என்றும் கிரன் மொரே கூறியுள்ளார். கங்குலி குறித்த நம்பிக் கைகள் தமக்கு இருப்பதாகவும் அவர் அணி யில் சேர்த்துக்கொள்ளப்படாமையினால் அவ ருடைய கிரிக்கெட் வாழ்வு முடிந்து விட்டதென கருதக்கூடாதெனவும் தெரிவித்தகிரன் மொரே எதிர்காலத்தில் கங்குலி மீண்டும் அணியில் சேர்த் துக்கொள்ளப்படலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விரைவில் விக்கெட்டுக்களை வீழ்த்தியமையே இந்திய அணியின் வெற்றிக்குக் காரணம்!

## இந்திய அணித் தலைவர் ராவிட்



பந்துவீச்சாளர்கள் விரைவில் விக்கெட்டுக் களை வீழ்த்தியது இந்திய அணியின் வெற் றிக்கு வழிவகுத்த[illegible] என்று இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் டிராவிட் பாராட்டியுள்ளார்.

மொகாலியில் நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இது தொடர்பாக இந்திய அணித்தலைவர் டிராவிட் அளித்த பேட்டியில் கூறியதாவது:

தொடக்க பந்து வீச்சாளர்கள் விரைவில் விக் கெட்டை வீழ்த்தியதோடு இலங்கை துடுப்பாட்டக் காரர்களுக்கு கடைசி வரை நெருக்கடி அளித்தனர். இது வெற்றிக்கு முக்கிய காரணமாகும். அணியின் ஒட்டுமொத்த ஆட்டமும் மிகவும் சிறப்பாக இருந்தது. இலங்கை அணி தோற்றாலும் நல்ல நிலைக்கு திரும்பும் சக்தி கொண்டது. எனவே மெத்தனமாக இருக்கக்கூடாது என்று அவர் தெரிவித்துள்ளார்.




# தோல்விக்கு அத்தப்பத்து விளக்கம்

துடுப்பாட்டம் சரியாக அமையாததன் காரண மாகவே நாம் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது என சிறிலங்கா அணியின் தலைவர் அத்தப்பத்து தெரி வித்துள்ளது.

மொகாலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு நாள் போட்டி தோல்வி குறித்து கருத்து கூறும் போது அத்தப்பத்து இவ்வாறு கூறினார்.

இந்திய அணி எல்லாத்துறைகளிலும் சிறப்பாக ஆடியது என்றும் எனிவரும் போட்டிகளில் நாம் சிறப் பாக ஆடுவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 30.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# என்றோ நிச்சயம் நிகழும்!

தமிழர் தாயகத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் முரண்பாடுக்ளும் மோதல்களும் இடம்பெறுவது வழக்கமானதொன்றாகிவிட்டது. இதனால் உயிர்ச் சேதங்களும், உடமை இழப்புக்களும் ஏற்படுவது தவிர்க்கமுடியாத தாகியுள்ளது.

இத்தகைய நிகழ்வுகளுக்கு, ஒருபுறத்தில் சிறிலங்கா ஆயுதப் படையினர் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதும், மற்றொரு புறத்தில் ஆயுதப் படையினரின் அத்துமீறல்கள், அடா வடித்தனங்கள் என்பனவும் காரணமாகவுள்ளன. இதில் ஒன்றிற்கு இனப்பிரச்சினை அடிப்படையானது. மற்றையது சம்பவங்களின் அடிப்படையிலானது. இதில் இரண்டாவது வகையில் இடம்பெற்ற அத்துமீறலே புத்தூர் கிழக்கில் நேற்று முன்தினம் இராணுவச் சிப்பாய் மேற்கொண்ட அத்துமீறலும், இதனால் ஏற்பட்ட களேபரமும் ஆகும்.

சிறிலங்கா இராணுவத்தரப்பும் சரி, ஆட்சியாளர்களும் சரி தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்வதால் தமிழ் மக்களின் போராட்டத்தினை நசுக்கி விடலாம் என்றோ, உரிமை களை மறுத்துவிடலாம் என்றோ எண்ணுவார்களேயானால் அதில் ஏமாற்றமே அடைவார்கள்.

இன்று தமிழர் தாயகத்தில் இடம்பெறும் சம்பவங்கள் தமிழ்மக்கள் எந்த நிலையிலும் ஒடுக்கு முறையை எதிர்த்தே ஆவார்கள் என்பதை வெளிப்படுத்தப் போதுமானவையாகும். அதாவது கற்கள் தடிகளைக் கொண்டாவது தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவார்கள் என்பதையே தமிழ் மக்கள் இன்று வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

ஆக்கிரமிப்பாளர்களின் மனோபாவம் என்பது மற்றவர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்வதாக எப்பொழுதும் இருந்ததில்லை. ஏனெனில் அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்டோரை சமதையாக வைத்துக்கொள்வதற்கு எப்பொழுதும் தயாராக இருப்பதில்லை. இதற்கு தமது இருப்புக் கேள்விக்குறியாகிவிடுமோ என்ற அச்சமே காரணமாகும்.

யாழ்.குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்து ஒரு தசாப்த காலம் ஆகின்றது. ஆனால் யாழ்.குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினால் இன்னமும் நிம்மதியாக நிலைகொள்ள முடியவில்லை. இனியும் முடியப்போவதில்லை. ஏனெனில் தமிழர் தாயகத்திற்கும் தமிழ் மக்களுக்கும் சிறிலங்கா ஆயுதப்படையினர் ஆக்கிரமிப்பாளர்கள், சிறிலங்கா ஆட்சியாளர்கள் அந்நியர்கள்.

ஆக்கிரமித்த பிரதேசத்தில் ஒரு தசாப்தம் என்றால் என்ன? ஒரு நூற்றாண்டு சென்றால் என்ன? ஆக்கிரமிப்பாளர்களால் நிம்மதியாக நிலைகொண்டிருக்க முடியாது என்பதே உலக வரலாறாகும். அவ்வாறு நிலைகொள்ள முடியுமெனில் இன்றைய உலக வரலாறு வேறொன்றாக இருந்திருக்கும். சமவுரிமை, சமத்துவம், சகோதரத்துவம், சனநாயகம், மனிதவுரிமைகள் என்பன பேசப்படுபவையாக இருந்திருக்க மாட்டாது. சிறுதரப்பினர் ஆள்வோராகவும் பெரும்பான்மையோர் ஆளப்படுபவர்களாகவே இருந்திருக்க முடியும்.

ஆகையினால் ஆக்கிரமிப்பு இராணுவமும் அதன் எஜமானர்களும் என்றோ ஒருநாள் வெளியேறியே ஆகவேண்டும். இதற்கு காரணம் இல்லாமல் இல்லை. அதாவது ஆக்கிரமிப் பாளர்களுக்கும் சுதந்திரத்திற்காகப் போராடுபவர்களுக்கும் இடையில் இணைப்பொன்றை அதாவது சமரசம் ஒன்றை ஏற்படுத்துதல் என்பது வரலாற்று ரீதியிலேயே தோல்வி கண்டுவிட்ட தொன்று. அதாவது சாத்தியப்பாடற்றதொன்று.

இதேசமயம் ஆக்கிரமிப்புக்குள்ளான மக்களோ தமது உரிமைகளை இழந்து வாழ்வதற்கு என்றுமே தயாராக இருந்து விடப் போவதில்லை. எத்தகைய ஒடுக்குமுறையானாலும் எத்தகைய சவால்களைச் சந்தித்தாலும் அவர்கள் தமது உரிமைக்கான போராட்டத்தை கைவிட்டுவிடப் போவதில்லை. வெறும் கைகளைக் கொண்டாயினும் தமது எதிர்ப்பை வெளிக்காட்டவே செய்வார்கள்.

இதற்கான எடுத்துக்காட்டுக்களே தற்பொழுது தமிழர் தாயகத்தில் சிங்கள ஆயுதப்படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் சிங்கள இராணுவத்திற்கும் - தமிழ் மக்களுக்கும் இடையில் அடிக்கடி ஏற்பட்டு வரும் முறுகல் நிலையாகும். வெறும் கைகளுடன் எதிர்க்கத் துணியும் மக்களை ஆயுதங்களைக் கொண்டு அடக்கிவிட முடியுமென சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்போ அன்றி சிறிலங்கா ஆட்சியாளர்களோ எண்ணுவார்களேயானால் அதில் அவர்கள் தோல்வியடைவதென்பது நிச்சயம்.

ஆகையினால் சிறிலங்கா ஆட்சியாளர்களும் சரி, இராணுவமும் சரி மக்களின் இத்தகைய உணர்வுகளுக்கும் கொந்தளிப்பிற்கும் சில சக்திகள் பின்னணியில் இருப்பதாகவும் தூண்டுவதாகவும் கற்பிதம் செய்துகொண்டு தொடர்ந்தும் ஆக்கிரமிப்புப் பகுதியில் நிலைகொள்வதற்கானஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பார்களே யானால் அவர்கள் இன்றோ, நாளையோ இல்லாதுவிடினும் நாளை மறுதினமாவது தோல்வியடைவது நிச்சயம்.

ஆனால் அவ்வாறானதொரு தோல்வி ஏற்படும்வரை பொறுப்பற்றிருந்தால் சிறிலங்கா ஆயுதப்படைக்கோ அன்றி அரசிற்கோ இங்கிருந்து எடுத்துச் செல்ல எதுவுமேயிருக்காது. அதாவது மக்கள் கிளர்ச்சியின்போது யாவும் துவம்சம் செய்யப்பட்டுவிடும். வரலாறுகளும் ஆக்கிரமிப்பாளர்களின் தோல்விகளை இவ்வாறே காட்டி நிற்கின்றது.

# இரண்டாம் நிலைத் தளபதி யார்? கடற்படையில் தொடரும் குழப்பம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையின் இராண்டாம் நிலைத் தளபதி யார் என்பதில் தொடர்ந்தும் குழப்பங்களும் முரண்பாடுகளும் அதிகரித்து வருவதாகத்தெரிவிக்கப் படுகிறது.

சிறிலங்கா கடற்படையின் மூன்றாம் நிலைத்தளபதி யாக இருந்த வசந்த கரன்னகொட கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டதில் இரண்டாம் நிலைத்தள பதியாக இருந்த மொகான் விஜவிக்கிரம கடும் அதிருப்தி யடைந்தார்.

தனக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வு நிராகரிப்பட்டது தொடர்பாக அவர் சிறிலங்கா தலைமை நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத்தாக்கல் செய்யக்கூடும் என்று கூறப்பட்டது.

அந்த நிலையில் வசந்த கரன்னகொடவுக்கு எதிர்புத்தெரிவிக்கும் வகையில் கரன்னகொட பதவியேற்ற நாள் முதல் தான் ஓய்வு பெறவுள்ள நவம்பர் 24 ஆம் திகதி வரை 84 நாட்கள் விடுப்பில் சென்றுவிட்டார். மொகான் விஜவிக்கிரம. தற்போது மொகான் விஜவிக்கிரம இடத்திற்குயாரை நியமிப்பது என்பது தொடர்பாகவும் பாரிய குழப்பங்கள்கடற்படையில் நீடித்து வருவதாக தெரிகிறது.

இரண்டாம் நிலைத்தளபதியாக றியர் அட்மிரல் சரத் ரட்ணகீர்த்தியை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வசந்த கரன்னகொட முதலில் பரிந்துரைத்துள்ளார். ஆனால் அதை நிராகரித்த சந்திரிகா மேலும் சில அதிகாரிகளை பரிந்துரைக்குமாறு கூறியுள்ளார். இதையடுத்து சரத் ரட்ணகீர்த்தி, சரத் வீரசேகர, நந்தன துடுவெட்ட, எல்.டி.தர்மப்ரிய மற்றும் வசந்த தென்னக் கோன் ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட் டுள்ளன. இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட உள்ளிட்ட இரு அதிகாரிகளுக்கு அண்மையில் இரண்டு ஆண்டுகள் பணி நீடிப்புஅளிக்கப்பட்டதையடுத்து சிறிலங்கா இராணுவத்தின் முப்படைகளிலும் பாரிய விசனங்கள் எழுந்துள்ளன. மேஜர் ஜெனரல்களின் ஓய்வு வயது 58 ஆகவும் பிரிகேடியர்களின் ஓய்வு வயது 57 ஆகவும் கேணல்களின் ஓய்வு வயது 56 ஆகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா பாராளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்த பின்னரே இது நடைமுறைப்படுத்தப்படும். இருப்பினும் இத்தகைய ஓய்வுவயது அதிகரிப்பால் இளம் நிலை இராணுவத்தினருக்கான பதவியுயர்வுகள் மறுக்கப்படும் என்றும் அவர்கள் இராணுவத்தின்உயர் பதவிகளுக்குச் செல்லவே முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்போரை கணக்கெடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பகுதிகளி லிருந்து இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களுக்கு வரும் அனைத்து வாக்காளர்களையும் கணக்கெடுக்க சிறிலங்கா தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பிலான பணிகளுக்கு கிராம சேவையாளர்கள், தெரிவத் தாட்சி அலுவலகர்கள் மற்றும் பொலி சாரை ஈடுபடுத்துவதற்கும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாயக்க தீர்மானித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கும் அரசியல் கட்சிகளின் செயலாளர் களுக்கும் இடையில் நேற்று முன் தினம் தேர்தல் செயலகத்தில் நடை பெற்ற சந்திப்பின் போதே இம் முடிவு மேற்கொள்ளப்பட்டது. வடக்கு கிழக்கில் தேர்தல் மோசடிகள் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கும் சுதந்திரமான நேர்மையான தேர்தலை நடத்துவதற்கும் அனைத்து நட வடிக்கைகளையும் எடுப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அக் கூட்டத்தில் உறுதி யளித்தார்.

அனைத்து கொத்தணிவாக் களிப்பு நிலையங்களிலும் வெளி நாட்டுக் கண்காணிப்பாளர்களையும் பவ்ரல் அமைப்பின் கண்காணிப் பாளர்களையும் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணை யாளர் செய்துள்ளார்.

# வடக்கு கிழக்கு பிரதேச மக்களுக்கு வாக்களிக்க உரிமையளிக்க வேண்டும்

## நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் வாழும் மக்களும் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்று தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய சோசலிச கட்சியின் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூர்ய நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

சிறிலங்கா தலைமை நீதிமன்றில் தனது சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா மூலம் அவர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ளதாவது. தென்னிலங்கை மற்றும் வடக்கு கிழக்குப்பிரதேசத்தில் தீவிரவாதக் குழுக்களின் வன்முறைகள் குறித்து எமது கட்சி கவலை கொள்கிறது. ஆனால் எவ்வித தலையீடுகளும் இன்றி நிதியானதும் நியானதுமான தேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்துவார் என்று நம்புகிறோம்.

ஜனநாயகத்தில் தேர்தல் நடைமுறைகள் என்பது பிரிக்க முடியாத ஒரு அங்கம். இந்த நாடு முழுமைக்கும், இந்த நாட்டின் அரசியல் யாப்பை ஏற்றுள்ள மக்கள் அனைவருக்கும் சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை உண்டு.

வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் இனப்பிரச்சினை இருந்த போதும் அரச பள்ளிகள், வைத்தியசாலைகள், வங்கிகள் ஆகியவை இயங்கி வருகின்றன. தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியிலும் இவை இயங்கி வருகின்றன. இனப்பிரச்சினை இருந்தபோதும்கூட அந்தப் பிரதேச மக்கள் இதுவரையிலான தேர்தல்களில் தங்களது வாக்குரிமையை செலுத்தியே வந்தனர்.யுத்த நிறுத்த ஒப்பந்தமானது நிர்வாக ரீதியாக மக்களை பிரித்துள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாது அரச படைகளும் அமைப்புக்களும் செயல்பட்டன. இது அரசியல் யாப் பிற்கு எதிரானது என்று தலைமை நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது. வடக்கு கிழக்கு மக்களின் வாக்களிக் கும் உரிமையை மறுக்கின்ற செயலாக நீதிமன்றம் கருதியது. தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிர தேசத்தில் உள்ள மக்களின் வாக்களிக்கும் உரிமையை நாம் தடுப்போமேயானால் அது பாரிய எதிர் விளைவு களை உருவாக்கும என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் விரைவில் இராஜினாமா

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான ஹட்சன் சமரசிங்க விரைவில் தனது பதவியிலிருந்து விலக உள்ளதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தலுக்கு பிறகு பதவி விலக உள்ளேன். வெளிநாட்டுப் பணியொன்றில் இணையவுள்ளேன். இது தொடர்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுக்கும் எந்த முடிவையும் ஏற்க தயாராக உள்ளேன். பிற தனியார் ஊடகங்களை ஒப்பிடுகையில் கடுமையான நட்டத்தில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபம் இயங்கி வருவதால் அதை நிர்வகிப்பது மிகக் கடினமாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் செய்தி இயக்குநரான ராஜ கடுகம்பொலவை தாக்கியதாக ஹட்சன் சமரசிங்க மீது குற்றம்சாட்டப்பட்டது.இதையடுத்து ஹட்சன் சமரசிங்கவின் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் இந்த இராஜி னாமா அறிவிப்பு வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாதாள உலக குழுவிடமிருந்து கடத்தப்பட்ட நபர் மீட்பு

(கொழும்பு)

பாதாள உலக குழுவினர் கடத்திச் சென்ற நபரை சிறிலங்கா பொலிசார் மீட்டுள்ளனர்.

இச் சம்பவத்தின் போது ஒன்பது மில்லி மீற்றர் ரக பிஸ்டல் மற்றும் ஆறு தோட்டக்களுடன் ஐந்து பாதாள உலக குழுவினரும் கைது செய்யப்பட்டனர். இரத் மலானை பெல்லாந்தோட்டைப்பிரதேசத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். பணம்கொடுக்கல்கள்வாங்கல் கள்தொடர்பாக இந்த நபரைவெலிக்கடை பிளாசா கட்டடத்திற்கு அருகிலிருந்து பலவந்தமாக கடத்திய இந்தபாதாள உலகக் குழுவினர் அவரை பாணந்துறை பிரதேசத்திற்குக் கொண்டுசென்று கொலைசெய்யத் திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

முன்னாள் பிரபல பாதாள குழுத்தலைவரான தம்மிக்கவின் சகோதரரும் மேலும் நால்வருமே இந் நபரைக் கடத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

# கலைஞன் உருகுவதால் பிறக்கின்ற கலை பார்ப்பவர்களை உருகவைக்கின்றது

## சிவ சத்தியமோகனின் அரங்கேற்றத்தில் புதுவை இரத்தினதுரை





(அலுவலக செய்தியாளர்)

ஒரு கலைஞன் தன்னை உருக்குவதன் மூலம் தான் கலைகள் பிறக்கின்றன- கலைஞன் உருகுவதன் மூலம் பிறக்கின்ற-பிறப்பெடுக்கின்ற கலை பார்ப்பவர்களை சென்று உருக வைக்கிறது இவ்வாறு தெரிவித்தார். தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள்:-

தமிழீழ நுண்கலைப் பிரிவினால் கிளி. கலாச்சார மண்டபத்தில் நடத்தப்பட்ட கலாவித்தார் சிவநாதன் சிவசத்தியமோகனின் இசை அரங்கேற்ற நிகழ்வில் கலந்து வாழ்த்துரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில், இசை ஏனைய கலை களை விட முக்கியமானது இந்த இசையானது எவரது அனுமதியும் இல்லாமல் எங்களிடம் சரணடைகிறது. கலைக்குள்ளே கலைஞர்கள் சரணடைய வேண்டும். அவர்கள் சரணடைவதன் மூலம்கலையைப் பற்றித் தெரியாதவர்களையும் அது ஊடுருவித் தாக்குகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கலாவித்தகர் சிவநாதன் சிவசத்திய மோகனின் இசை அரங்கேற்ற நிகழ்வில் வைத்து தமிழீழ தேசியத் தலைவருக்குரிய நினைவுப் பரிசில் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் கலாவித் தகர் சிவசத்தியமோகனால் வழங்கி வைக்கப்பட்டது.

தமிழீழ நுண்கலைப்பிரிவு நடாத்திய கலாவித்தகர் சிவநாதன் சிவசத்திய மோகனின் இசை அரங்கேற்ற நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் உள்ள பண்பாட்டு மண்டபத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது.

நேற்று மாலை 3.00 மணியளவில் ஆசிரியர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி அரங்கேற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

நிகழ்வில் சிவ சத்தியமோகனின் முதல் குருவும் நாட்டுப் பற்றாளருமான திருமதி மோகனாம்பிகை கணேசனின் திருவுருவப் படத்திற்கு கலாவித்தகர் சிவசத்திய மோகன் ஈகச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து இசை அரங்கேற்ற நாயகன் கலாவித்தகர் சிவ சத்தியமோகன் பெற்றோரிடமும் சங்கீத பூசணம் நடராசாவிடமும் ஆசி பெற்றார். நிகழ்வில் சங்கீத பூசணம் பாலசிங்கம் அனுப்பிய ஆசிச் செய்தி வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து அரங்கேற்ற நிகழ்வு நடைபெற்றது.

அதனையடுத்து வாழ்த்துரையினை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் நிகழ்த்தினர்.

மதிப்பீட்டுரையினை திருமதி த்ரமபுபதி சிதம்பரநாதன் வழங்கினார்.

தொடர்ந்து அரங்கேற்ற நிகழ்வில் கலந்து கொண்ட கலைஞர்களுக்கும் விருந்தினர்களுக்குமான நினைவுப் பரிசில்களை சிவசத்தியமோகன் வழங்கி வைத்தார்.

இதில் சிறப்பாக தமிழீழ தேசியத் தலைவருக்கும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பதமிழ்ச்செல்சன் அவர்களுக்கும் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களுக்குரிய நினைவுப் பரிசில்களும் சோ.தங்கனிடம் சிவசத்தியமோகன் வழங்கி வைத்தார்.

மேற்படி அரங்கேற்ற நிகழ்விற்கு தமிழீழ நுண்கலைக் கல்லூரியின்அனைத்து கலைஞர்களும், மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள் கலைவித்தகர்கள் கலைஞர்கள் பொது மக்கள், ஆர்வலர்கள் எனப் பெருந் திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு.லோ)

# சுனாமி நிவாரண களஞ்சியம் முற்றாக எரிந்து நாசம்

(அம்பலாங்கொடை)

அம்பலாங்கொடையில் அமைந்துள்ள திகலந்த ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்களஞ்சியம் நேற்றுக்காலை 7.00 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

பாடசாலை உபகரணங்கள், கூடாரங்கள், உடுதுணிகள் என்பன குறித்த களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் அவை அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகிந்தவிற்கு ஆதரவாக படை அதிகாரிகள் சந்திரிகாவிடம் ஐ.தே.க முறையிட முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு திரட்டுவதற்காக இராணுவத்திற் குள்ளும் பொலிசாரிற்குள்ளும் பிரச்சாரம் மேற்கொள்ளும் மூவர் மீது சந்திரிகாவிடம் முறைப்பாடு செய்ய ஐக்கிய தேசியக்கட்சி முடிவு செய்துள்ளது.

மகிந்தவிற்கு ஆதரவான இரு மேஜர் ஜெனரல்கள் மற்றும் பிரதிபொலிஸ்மா அதிபர் ஒருவரின் செயற்பாடுகள் குறித்து முழுமையான அறிக்கை ஒன்றினை கையளிக்க முடிவு செய்துள்ளதாக அக்கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச அதிகாரிகள் தேர்தல் சமயத்தில் நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளை மீறியுள்ளதுடன் தேர்தல் சட்ட விதிகளையும் மீறி இந்த மூன்று அதிகாரிகளும் நடந்து கொள்வதாக அதில் ஐ.தே.க தெரிவிக்கவுள்ளது. ராஜபக்ஷவின் சார்பில் இராணுவத்திற்குள்ளும் வட கிழக்கில் இருக்கும் பொலிசாரிற்கும் செயற் படுத்த இருந்த திட்டங்கள். அதற்கென பயன்படுத்தவிருந்த இராணுவ ரக் வண்டிகள்,ஜீப் மற்றும் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் பற்றிய தகவல்களையும் அம்மனுவில் தெரிவித்துள்ளதாகவும் திஸ்ஸ அத்தனாயக்கா கூறினார்.

இதனிடையே தேர்தல் விதிகளை மீறும்பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக சிறிலங்காவின் தேசிய பொலிஸ் ஆணைக்குழுத் தலைவர் ரஞ்ஜித் அபேசூரிய தெரி வித்துள்ளார்.

எந்தவொரு அதிகாரியும் தேர்தல் சட்டத்தை மீறுவாராயின் அது குறித்து தேசியஆணைக்குழுவில் பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவிற்கு தொலைபேசியினூடாக அறிவிப்பதற்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் முறைப்பாடுகள் கிடைத்ததும் அவற்றை விசாரணை செய்து உரிய அதிகாரிகளுக்கு தேவையான உத்தரவுகளை உடனடியாக வழங்கி தவறுகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கபப்டும் என்றார்.

### எரிபொருட்களின்....

எனினும் கடந்த சனவரியிலிருந்து வழங்கவேண்டிய நிவாரணத் தொகையான 1.400 கோடி ரூபா இன்னும் நிலுவையில் இருப்பதாக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

### கடற்படை...

கடற்படை அதிகாரிகளும் தற்போது திருகோணமலை கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹெல உறுமய கட்சிக்குள் மீண்டும் முறுகல் நிலை

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் மீண்டும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன."இதன் அடிப்படையில் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகப்போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையில் ஜாதிக ஹெல உறுமய சனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளித்து வருகிறது. இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷவின் பிரசாரக்''கூட்டங்களில் தாம் பங்கேற்கவேண்டும் என எல்லாவெல மேதானந்த தேரர் வெளியிட்ட கருத்தை கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவரான அத்துரலியே ரத்தன தேரர் ஏற்றுக்கொள்ளவில்லை இதனையடுத்தே எல்லாவெல மேதானந்த தேரர் கட்சி தலைமை பதவியில் இருந்து விலகப்போவதாக தெரிவிக்கப்பட்டது.எனினும் இந்த தகவல் தொடர்பில் எல்லாவெல மேதானந்த தேரர் தமது மறுப்பை வெளியிட்டுள்ளார்.தமது அரசியல் எதிரிகளால் பரப்பப்பட்ட பொய்யான தகவல் இது என அவர் குறிப்பிட்டார்தாம் பதவி விலகுவதற்கு ஆலோசிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (32)

# இரண்டு தமிழ் இளைஞர்கள் கைது

பொல்காவலையில் இரண்டு தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைதாகியுள்ளனர். எதிர்க்கட்சி தலைவரும் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் இவர்களின் நடமாட்டம் அமைந் திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இவர்கள் மீதான விசாரணையின் பின் இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளதாக பொல்காவலை பொலிஸ் பரிசோதகர் இந்துநில் குமாரசிங்க தெரிவித்துள்ளார். (32)

### அமைதி....

வதாக அக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபகஷ குற்றம் சாட்டுகிறார். தமது கட்சியின் தலைவரின் கோட்பாட்டை மகிந்த ராஜபக்ஷ குற்றம் சொல்வாரெனின் அக்கட்சியிலிருந்தும் பிரதமர் பொறுப்பிலிருந்தும் அவர் விலக வேண்டும்.

அனைத்துத் தரப்பினாலும் ஏற்கப்பட்ட நாடு பிளவுபடாமல் தடுப் பதற்கான அதிகாரப்பகிர்வைக் கொண்ட கோட்பாட்டையே நாம் முன் வைக்கின்றோமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### படையினரின்....

மீது படையினர் மேற்கொண்ட இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளைக் கண்டிக்கும் முகமாகவேஇந்த துக்கதினத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை,நேற்று யாழ்ப்பாணத்தில் பெருமளவான கடைகள் மூடப்பட்டி ருந்ததுடன் பொது நிறுவனங்கள் எதுவும் இயங்கவில்லை. கல்வி நிலையங்கள், கடைகள், பொது இடங்களில் எல்லாம் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இன்று கிளிநொச்சியில் இயல்புநிலை பாதிப்புக்குள்ளாகாத வகையில் வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில்கறுப்புக் கொடி களைப் பறக்கவிட்டு துக்க தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில், யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பாலியல் வல்லுறவு முயற்சியை கண்டிப்பதுடன் அதன் பின்னரான பொதுமக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் சாவடைந்த த்ரமராஜா நிரோஜனுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், காயமடைந்த 15 வரையான எம்மின உறவுகளுக்கும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேவேளை, சிங்கள அரச படைகளால் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் உள்ள இவ்வேளையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய ஆத்திரமூட்டும் செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சிங்கள இராணுவத்தின் ஆழ்மனங்களில் ஆழப் பதிந்துள்ள தமிழர் விரோத எண்ணங்களின் வெளிப்பாடே இத்தகைய சம்பவங்களாகும். தமிழ் பேசும் மக்களின் சனநாயக வழியிலான அறப்போராட்டங்களை தமிழர் தரப்பு இன்றும் நடாத்தி வருகிறது.

சகல பலங்களையும் பெற்றிருக்கின்ற தமிழர் தரப்பை தமிழ்பேசும் மக்களின் உணர்வுகளை ஆயுத வழிமுறையில் கையாள சிங்கள அரசு முற்படுவது எமக்கு வருத்தம் தருகிறது. சமாதானத் தீர்வுகள் எதுவும் இன்றி ஏமாற்றத்தின் விளிம்பில் கொதித்துப்போயுள்ள தமிழ்பேசும் மக்களைச் சீண்டிப் பார்க்க சிங்கள தேசம் முற்படுவது பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் ஒன்றாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம்பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.